கோகுலம்

குழந்தைகள் பத்திரிகை
மாதம் இருமுறை
10-12-1972
30 காசு




என்றும் குன்றாது அவரது ஆற்றல்; ஏனெனில் அது ஆன்மாவின் ஆற்றல்



ஆத்ம சக்தி, அறிவாற்றல், தேசிய உணர்வு அனைத்தும் அற்புதமாகக் கலந்த நவீன காலத் துறவியாவார் விவேகானந்தர். சீலம் என்பது தவற்றை மறுப்பது மட்டுமல்ல, நல்லதை உறுதியுடன் நிலைப்படுத்திக் காட்டுவதுமாகும் என்றார். இதைப் பெறப் பெருந்தடை பலவீனமே என்று இயம்பினார். ஆத்ம சக்தி மட்டுமே அளிக்கக் கூடிய ஆற்றலின் சிகர நிலைக்குப் பாரதம் மீண்டும் எழும்ப வேண்டும் என அவர் பேரவாக் கொண்டிருந்தார். தாழ்த்தப்பட்டோர், உரிமை மறுக்கப்பட்டோர், சலுகையற்றோர் ஆகியோரின் நலன்களுக்காகத் தீவிர உணர்வுடன் போராடினார். இந்தியாவின் ஆத்மிகப் பண்புகளிலிருந்து உயிரூட்டம் பெற்றுத் தனது சகோதர மக்கள் தலைநிமிர்ந்து நிற்க வேண்டும் என்று கோஷித்தார். இந்தியாவின் ஒவ்வொரு தூசியும் அவருக்குப் புனிதமானது. சகல சமயங்களின் சமரசத்தையும் அவர் பிரகடனம் செய்தார். சாராம்சத்தில் மனித குலம் ஒன்றே என முழங்கினார். விவேகானந்தரைப் போன்ற மகாபுருஷர்கள் எல்லாக் காலத்துக்கும், எல்லாத் தேசத்துக்கும் உரியவர்கள். அவர்கள் சமுதாயம், சம்பிரதாயம், இடம், காலம் இவற்றின் கட்டுக்களுக்கு மேம்பட்டவர்கள். ஈசுவர சிருஷ்டிக்குத் தொண்டு செய்து, அதுவே ஈசுவரனுக்குத் தொண்டு என்று காட்டுவதற்காக அந்த மகாபுருஷர்கள் ஜன்மம் எடுத்தனர். மகான் என்பவர் உலகனைத்துக்கும் பொதுவான ஒரு வியக்தி.

மபத்லால் க்ரூப்

MAFATLAL GROUP



கோகுலம்

மலர் 1 — இதழ் 17

★

டிசம்பர் 10, 1972
பரிதாபி ௵
கார்த்திகை 25௳



''கொஞ்சமாவது
...த்தி இருக்கா ?''



''ஓ'ன்னு சத்தம்
போட்டால்.....''



''தலை வேதனை....
நிம்மதியாக்
கோகுலம் படிக்க
விடுங்கோ !''

உயிர்களிடத்து அன்பு
வேண்டும் — தெய்வம்
உண்மையென்று தானறிதல்
வேண்டும்

-- பாரதியார்

சந்தா விவரம் :


தனிப் பிரதி விலை 30 காசு
ஒரு வருடம் ரூ. 7-00
ஆறு மாதம் ரூ. 3-50
வெளி நாடுகள் ரூ. 18-00

அட்டைப்படச் சிறுமி :

எனக்குள் இனிக்கும் நினைப்பு,
இதழில் முகிழ்க்கும் சிரிப்பு !

வண்ணப்படம்: வித்யாவ்ரதா

சரியான வேளையில் சரியான வேலை...



49F-203R-TAM

ஆத்திசூடி

தொன்மை மறவேல்

ஒரு தமிழ்ப் பேராசிரியர்—தொன்மை-பழைமையான வார்த்தை; மறவேல்-மறந்து விடாதே, புறக்கணிக்காதே—என்று பொருள் கூறுகிறார். இது பழைய சரக்கு, இந்தக் காலத்துக்கு உதவாது என்று புராணங்களில் காணும் நல்லுபதேசத்தைத் தள்ளிவிடக் கூடாது.

தோற்பன தொடங்கேல்

தோற்றுப் போகும் என்று அறிந்த காரியங்களை ஆரம்பிக்காதே. ஆராய்ந்து பார்த்து ஆகாது என்று கண்ட பின் வீண் ஆசையின் தூண்டுதலின் பேரில் ஒரு காரியம் செய்யத் தொடருதல் தவறாகும். ஆசையானது அறிவை அடக்கி வீண் முயற்சிகளில் தள்ளப் பார்க்கும். இது கூடாது.

நன்மை கடைப்பிடி

நாம் செய்யும் செயலும் பேசும் பேச்சும் எண்ணும் எண்ணங்களும் நன்மை தீமை என்று இருவகைப்படும். நாம் நன்மையை உறுதியாகப் பற்றித் தீமையை ஒழித்தல் வேண்டும். நன்மையைப் பற்றி நிற்பது சிற்சில சமயம் இடையில் கடினமாகத் தோன்றினும் நன்மையை உறுதியாகப் பற்றி நிற்றலே கடமை.

நாடொப்பன செய்

நீ செய்யும் செயல் தகுந்ததா இல்லையா என்று சந்தேகம் தோன்றினால் நாட்டிலுள்ள பெரும்பாலோர் எதை ஒப்புக்கொள்வார்களோ அதைச் செய்வாயாக. எது நல்லது எது அல்ல என்று அறிய வேறு வழி இல்லாவிடில் நாட்டிலுள்ளவர்களில் பெரும்பாலோரின் அபிப்பிராயத்தை அறிந்து அவ்வழி நடத்தல் நன்று. இரண்டு முறைகளில் எதுவும் சரியாகத் தோன்றின இடத்தில் நாட்டில் பெரும்பாலோர் ஒப்பும் முறையே சிறந்ததாகும். நாட்டில் ஏதேனும் அதிகாரம் பெற்றவர்களுக்கு இந்த வாக்கியம் மிகவும் கவனிக்கத் தக்கது. நாடொப்பன செய்வது அரசு புரிவோர்களுக்கு மிகவும் அவசியம்.



ராஜாஜி

ரயில்வே டோக்கன்

எக்ஸ்பிரஸ் வேகமாகச் சென்று கொண்டிருக்கிறது. ஜன்னல் வழியாக நாம் தலையை வெளியே நீட்டுகிறோம். ஏதோ ஒரு சிறு ஸ்டேஷனைக் கடக்கப் போகிறது எக்ஸ்பிரஸ். கைகாட்டிகள் சாய்ந்துள்ளன. ஸ்டேஷனை நெருங்கி விட்டது எக்ஸ்பிரஸ். பிளாட்ஃபாரத்தில், கையில் ஒரு வளையத்துடன், பாயிண்ட்ஸ்மேன் நிற்கிறார். எஞ்சினிலிருந்து ஒரு வளையத்தை வீசி எறிந்து விட்டு லாகவமாக வளைந்து பாயிண்ட்ஸ்மேன் கையில் உள்ள வளையத்தை வாங்கிக் கொள்ளுகிறார் ஃபயர்மேன். எல்லாம் இமைப்பொழுதில் நடந்துவிடுகிறது. பல முறை நாம் கண்ட காட்சிதான்; அழகான காட்சி அல்லவா? இரவு வேளைகளில் பாயிண்ட்ஸ்மேன் ஒரு கையில் எரியும் தீப்பந்தத்துடனும் மற்றொரு கையில் வளையத்துடனும் பிளாட்ஃபாரத்தில் நிற்பதை நீங்கள் பார்த்திருக்கிறீர்களா? அந்த வளையத்துக்கு ஆங்கிலத்தில் 'பவுச்' (Pouch) என்று பெயர்.

அந்தப் 'பவுச்'சுக்குள் ஓர் இரும்புக் குண்டு இருப்பதாகவும் அதுதான் ரயிலுக்கான சாவி என்றும் உங்களுக்கு யாரேனும் சொல்லியிருக்கக் கூடும். பவுச்சுக்குள்ளிருக்கும் டோக்கன் அல்லது சாவி எஞ்சினுக்குள்ளே எதையும் திறக்கவோ இயக்கவோ உபயோகிக்கப்படுவதில்லை என்பது உங்களுக்குத் தெரியுமா? ஆனால் ஃபயர்மேன் 'பவுச்'சை நழுவ விட்டுவிட்டால், ரயிலை நிறுத்தி டோக்கன் உள்ள பவுச்சை எடுத்துக் கொண்டுதான் ரயிலைக் கொண்டு செல்ல வேண்டும் என்கிற செய்தி ஆச்சரியமாக இல்லையா?

இந்த டோக்கன் உருண்டையாகத்தான் இருக்க வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. குறிப்பிட்ட இருப்புப் பாதையில் உள்ள ஸ்டேஷன்களில் உபயோகப்படுத்தப்படும் பிளாக் இயந்திரங்களுக்குத் தக்கவாறு, இவை உருண்டையாகவோ, சாவிபோல், நீளமாகவோ, மாத்திரை போல் தட்டையாகவோ இருக்கும். இந்த டோக்கன் பரிமாறல் எதற்காக?

ஒற்றை ரயில் பாதைகளில் ரயில் மோதிக் கொள்ளாமல் இருக்கவே, இந்த டோக்கன் முறை, அல்லது பிளாக் (Block) முறை பின்பற்றப்படுகிறது. ஒவ்வொரு ரயில் நிலையத்திலும் நிலைய அதிகாரியின் அறையில் இரண்டு இயந்திரங்கள் இருப்பதை நாம் கண்டிருக்கிறோம். இவைதான், டோக்கனை அளிக்கும், பெற்றுக் கொள்ளும் பிளாக் கருவிகள். பேரூர், நடுவூர், சிற்றூர் என மூன்று ரயில் நிலையங்கள் இருப்பதாக வைத்துக் கொள்வோம். நடுவூரில் உள்ள இயந்திரங்கள் இரண்டும் முறையே பேரூர், சிற்றூர் ஆகிய ஸ்டேஷன்களுடன் மின் இணைப்புக் கொண்டவையாக இருக்கும். பேரூரிலிருந்து சிற்றூர் செல்லும் ரயில் வண்டி நடுவூரில் ஒரு டோக்கனைக் கொடுத்து விட்டு மற்றொரு டோக்கனைப் பெற்றுக் கொள்ளுகிறது. இப்போது, சிற்றூரில் உள்ள ஓர் இயந்திரம் தானாகப் பூட்டிக் கொள்ளுகிறது. அதாவது நடுவூருக்குச் செல்லும் வண்டி எதற்கும் சிற்றூரால் டோக்கன் வழங்க முடியாது! அதே போல் நடுவூரிலிருந்து புறப்பட்ட ரயில் சிற்றூர் வந்து சேரும் வரை மற்றொரு டோக்கன் எடுக்க முடியாது. எனவே ரயில்கள் இரண்டு ஸ்டேஷன்களுக்கிடையே எதிர் எதிராக மோதிக் கொள்வதும், ஒன்றன்பின் ஒன்றாக மோதிக் கொள்வதும் தடுக்கப்படுகின்றன.

இரட்டை ரயில் பாதைகள் போடப்பட்டுள்ள இடங்களில் பிளாக் கருவிகளுக்கும் டோக்கன்களுக்கும் அவசியமில்லை. சென்னையிலிருந்து ஜோலார்ப்பேட்டை வரையில் இரட்டைப் பாதை போடப்பட்டு விட்டதால் இந்த மார்க்கத்தில் 'டோக்கன்' பரிமாறல் இல்லை.



அடுத்த முறை ரயில் பிரயாணம் செய்யும் போதும், ரயில்வே ஸ்டேஷனில் காத்திருக்கும்போதும், இந்த டோக்கன் எப்படி வழங்கப்படுகிறது, எடுக்கப்படுகிறது, இயந்திரம் எப்படி இயக்கப்படுகிறது என்றெல்லாம் பாருங்கள்.

— ஏ. சங்கரன்

கண்ணன் கனியமுதம்

திருமுருக கிருபானந்தவாரியார்

கண்ணனது திருவிளையாடல்

கருணையின் வடிவாகிய கண்ணன், மனிதக் குழந்தை போல் மழலை மொழிகள் பேசுவார்; இனிய கீதங்களைப் பாடி ஆடுவார்; கோபிகா மாதர்கள் இட்ட ஏவலைச் செய்வார். அம்மாதர்கள், ''கிருஷ்ணு! சிறிது கூத்தாடு, பார்ப்போம்'' என்பார்கள். எம்பெருமான் தம் சிவந்த திருவடியைத் தூக்கி நடனம் ஆடுவார்.

மரக்கால் முக்காலி, மரப் பொம்மை, செப்புத் தட்டு முதலியவைகளை வைத்துச் சிரித்த வண்ணம் விநோதமாக விளையாடுவார். தெருவில் போகும் குடுகுடுப்பைக்காரன் முதலியவர்களைக் கண்டு பயந்தவரைப் போல் ஓடி ஒளிந்து கொள்ளுவார்.

நீர்க் குடங்களில் தமது நிழலைக் கண்டு ஒரு சிறு கோல் எடுத்து அடிக்கப் போவார். ''ஓ! இது என்னை அடிக்க வருகிறதே!'' என்று கூறி அழுவார்.

பரம்பொருளாகிய தம் அளவற்ற மகிமையை மறைத்து மானுடக் குழந்தை என்று நம்புமாறு பலப் பல ஆடல்கள் புரிந்தருளினுர்.

பலராமனுடைய அன்னையாகிய ரோகணி யமுனையில் நீராடி, சிறந்த ஆடை அணிகலன்களை அணிந்து வருகின்ற வழியில் கண்ணபிரான் பலராமனுடனும் ஏனைய கோபால பாலகர்களுடனும் அதியற்புதமாக விளையாடிக் கொண்டிருப்பதைக் கண்டாள். ''பலராமா! பரந்தாமா! வீட்டுக்கு வாருங்கள்'' என்று அழைத்தாள். அவளுடைய வார்த்தையை அவர்கள் அலட்சியம் செய்து ஆடிக் கொண்டேயிருந்தார்கள்.

ரோகணி திருமாளிகை சென்று யசோதையிடம் கூறினுள். யசோதை விரைந்து சென்று, ''குழந்தைகளே! எத்தனை நேரம் விளையாடுவது? உங்கள் தந்தையார் கண்டால் கோபிக்கமாட்டாரா? கிருஷ்ணு! இன்று உன் ஜன்ம நட்சத்திரமாயிற்றே? வா!'' என்று அழைத்தாள்.

பகவான் பலராமருடனும் மற்றச் சிறுவர்களுடனும் அன்னையைக் கட்டி அணைத்துக் கொண்டு அவளுடன் இல்லஞ் சேர்ந்தார். யசோதை இராமனுக்கும் கிருஷ்ணனுக்கும் திருமஞ்சன நீராட்டி, அணிகலன்களைப் பூட்டி, சந்தனப் பொட்டு தீட்டி, பாராட்டி மகிழ்ந்தாள். ஏழை எளியவர்களுக்குப் பொற் காசுகளைக் கண்ணன் கையில் கொடுத்துத் தானம் செய்வித்தாள்.

அகில லோக ஏகநாயகன் தாயும் தந்தையும் மகிழ அநேக லீலா விநோதங்களைச் செய்து வந்தார்.


(தொடரும்)



அரபுக் குதிரை யாருடையது?

அழகு பழனிச்சாமி

வெகு காலத்துக்கு முன்னால் பாண்டிய நாட்டை நன்னன் என்ற அரசர் ஆண்டு வந்தார். அவருடைய மந்திரி சபையில் மணிசேகரன் என்ற தலைமை மந்திரி ஒருவர் இருந்தார். அவர் கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கினார். எத்தனை பெரிய சிக்கல்களையும் தம் மதியூகத் திறமையினால் தீர்த்து வைத்துவிடுவார். அதனால் அரசரிடம் அவருக்குத் தனி மதிப்பு. மக்களும் 'மதியூகி மணிசேகரன்' என்றே அழைத்தனர்; போற்றிப் புகழ்ந்தனர்



ஒரு நாள் அரசர் நன்னன் அரியாசனத்தில் அமர்ந்திருந்தார். அப்போது அங்கே விசித்திரமான வழக்கு ஒன்று வந்து சேர்ந்தது அன்றைக்கென்று பார்த்து 'மதியூகி மந்திரி மணிசேகரன்' அரசவையில் இல்லை.

அரசவைக்கு வந்து சேர்ந்த வழக்கு இதுதான்:

உயர்தரமான அராபியக் குதிரை ஒன்றை ஒருவன் இழுத்துக் கொண்டு மன்னனிடம் வந்து சேர்ந்தான். அவனைத் தொடர்ந்து இன்னொருவன் வந்திருந்தான். இரண்டு பேரும் அரசனை விழுந்து வணங்கி எழுந்து தங்களின் வழக்கை எடுத்துரைத்தனர்.

"அரசே! என் பெயர் சங்கண்ணன். இந்த அராபியக் குதிரை என்னுடையது. இது இந்த ஊருக்கே தெரியும். இருந்தும் இதோ நிற்கிறானே அங்கணன் இவன் இந்தக் குதிரை தன்னுடையதுதான் என்று சொந்தம் கொண்டாடுகிறான்; தகராறு செய்கிறான். அரசே! நீங்கள்தான் எனக்கு நீதி வழங்க வேண்டும்" என்றான் சங்கண்ணன்.

உடனே மற்றவன், "அரசே! என் பெயர் அங்கணன். இந்தக் குதிரை என்னுடையதுதான். நான் காசி யாத்திரை செல்லும்போது 'குதிரையைப் பார்த்துக் கொள்; வந்து வாங்கிக் கொள்கிறேன்' என்று கொடுத்துவிட்டுப் போனேன். இவன் என் நண்பன் தான். இருந்தும் இப்படி என்னை மோசடி செய்ய நினைக்கிறான். நீங்கள் தான் எனக்கு நியாயம் வழங்கிக் காப்பாற்ற வேண்டும்...." என்று உருக்கமாக வேண்டிக் கொண்டான்.

அரசர் சிறிது நேரம் யோசனை செய்தார். அவருக்கு ஒன்றும் புரியவில்லை. "உங்கள் வழக்குக்குத் தீர்ப்புச் சொல்ல இன்னும் இரண்டு தினங்களாகும். அது வரையில் தகராறுக்குரிய குதிரை அரண்மனை லாயத்திலேயே இருக்கட்டும்" என்று உத்தரவு போட்டார். உடனே சங்கண்ணன், அங்கணன் இருவ

ரும் அரசனின் உத்தரவை ஏற்றுக் கொண்டு திரும்பினர்.

இரண்டு நாட்களில் வெளியூர் போயிருந்த மதியூகி மந்திரி மணிசேகரன் வந்து சேர்ந்தார். உடனே அரசர் அவரிடம் அந்த வழக்கு பற்றி எடுத்துரைத்தார். எல்லாவற்றையும் மிகக் கவனத்துடன் கேட்ட மந்திரி மணிசேகரன், ''அரசே! குதிரைக்கு யார் சொந்தக்காரன் என்பதை நாளையே கண்டுபிடித்துவிடுவோம்'' என்றார் தெளிவாக!

மறு நாள் அரசர் அரியாசனத்தில் அமர்ந்திருக்க வழக்கு மறுபடியும் விசாரணைக்கு வந்தது. விசாரணை மண்டபத்தில் பொதுமக்கள் ஏராளமாகக் கூடியிருந்தனர்.

மதியூகி மந்திரி மணிசேகரன், சங்கண்ணன் அங்கணன் இருவரையும் அழைத்து விசாரணை செய்தார். இரண்டு பேருடைய வாக்குமூலங்களிலிருந்தும், சாட்சிகளின் வாய்மொழியிலிருந்தும் வழக்கைத் தீர்க்க முடியாமல் இருந்தது.

மந்திரி மணிசேகரன் யோசனை செய்தார். பின்னர், வாதி பிரதிவாதிகளைப் பார்த்து, ''இந்த வழக்கு மிகவும் சிக்கலானதாக இருக்கிறது. குதிரை யாருக்குச் சொந்தமானது என்பதற்குத் தெளிவான சாட்சிகள் இல்லை. இரண்டு பேர் பக்கமும் நியாயம் இருப்பதுபோல் தோன்றுகிறது. ஆதலால் நான் ஒரு முடிவு சொல்கிறேன். 'இந்த அராபியக் குதிரை விலை உயர்ந்தது. நல்ல அழகானது. இந்தக் குதிரைக்கு இரண்டு பேர்களுமே உரிமை கொண்டாடுகிறீர்கள். ஒரு குதிரையை இரண்டு பேருக்கும் பங்கு போட இயலாது. ஆதலால், இந்தக் குதிரை அரசருக்கே இருக்கட்டும். இதற்குப் பதில் இரண்டு சாதாரணக் குதிரைகளை ஆளுக்கொன்றாய்ப் பெற்றுக் கொள்ளுங்கள். இதுதான் தீர்ப்பு!'' என்று கூறினார். மன்னருக்கு ஒன்றும் புரியாதிருந்தாலும் மந்திரியின் தீர்ப்பை அங்கீகாரம் செய்தார்.

''குதிரை லாயத்தில் பல குதிரைகள் உள்ளன. ஆளுக்கொரு குதிரையைப் பிடித்துக் கொண்டு போங்கள்!'' என்றார் மந்திரி. இருவரும் அரசரை வணங்கிவிட்டுச் சென்றனர்.

மந்திரி மணிசேகரன், குதிரை லாயத்தை நோக்கிச் செல்லும் இருவரையும் கூர்ந்து கவனித்தார். அவர் முகம் பளிச்சென்று மலர்ந்தது.

''அரசே! அதோ குதிரை லாயத்தை நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறார்களே, அந்த இரண்டு பேர்களில் பின்னால் போகிறவனுடையதுதான் இந்த அராபியக் குதிரை!'' என்றார்.


''எதனால் சொல்லுகிறீர்கள்?'' என்று கேட்டார் அரசர்.

''அரசே! பின்னால் போகிறவனோ, 'விலை உயர்ந்த நம் குதிரையை விட்டுவிட்டு, இப்படி மட்டமான குதிரையைக் கொண்டு செல்லப் போகிறோமே' என்ற வருத்தத்தில் சோர்ந்து மெள்ள நடந்து போகிறான். முன்னால் போகிறவனோ, 'எப்படியோ நமக்கொரு குதிரை கிடைத்து விட்டது' என்ற மகிழ்ச்சியில் விரைந்து செல்கிறான்!'' என்று கூறினார், மதியூகி மந்திரி மணிசேகரன்.

அரசர் மகிழ்ச்சி அடைந்தார்.

பின்னால் போகும் அங்கணனை அழைத்து ''உன் அராபியக் குதிரையை நீ அழைத்துக் கொண்டு போ!'' என்று உத்தரவிட்டார்.


பிறகு முன்னால் போய்க் கொண்டிருந்த சங்கண்ணனை அழைத்து, அவனை அடித்து மிரட்டியதில் உண்மையை ஒப்புக் கொண்டான். நம்பிக்கைத் துரோகம் செய்து ஏமாற்றியதற்காக அவனுக்குத் தண்டனையும் அளித்தார் அரசர்.






ஒட்டுமாஞ்செடி

கிருஷ்ண தேவராயருக்கு மாம்பழங்கள் என்றால் ரொம்பப் பிடிக்கும். உயர்ந்த ஜாதி ஒட்டுமாங் கன்றுகளை வரவழைத்திருந்தார். பதினாறு கன்றுகள் வந்திருந்தன. அரண்மனைத் தோட்டக்காரனிடம் அவைகளைக் கொடுத்து 'இந்தப் பதினாறு ஒட்டு மாங் கன்றுகளையும் ஒரு வரிசைக்கு நான்கு மரங்கள் வரும்படி நட வேண்டும். மொத்த வரிசைகள் பன்னிரண்டு இருக்க வேண்டும்' என்றார். தோட்டக்காரன் விழித்தான். 'பன்னிரண்டு வரிசை, வரிசைக்கு நான்கானால் நாற்பத்தெட்டு கன்றுகள் அல்லவா வேண்டும்?' என்பதே அவன் குழப்பத்துக்குக் காரணம். ஆனால் ராயர் அவனுக்கு அருகே உள்ள படத்தில் காட்டியுள்ளபடி பதினாறு கன்றுகளை எப்படி நடுவது என்பதை விளக்கினார். ராயருக்குச் சளைத்தவனா ராமன்? அருகே இருந்த அவன் 'ஏன் இப்படியும் செய்யலாமே?' வரிசைக்கு நான்காகப் பதினைந்து வரிசைகள் வரும்படிகூட நடலாம் — இதே பதினாறு கன்றுகளைக் கொண்டு!' என்றான். இப்போது தோட்டக்காரன் மட்டுமல்ல, ராயருக்குமேகூடக் குழப்பம் ஏற்பட்டது. ஏன் உங்களுக்கும் கூடத்தான் இல்லையா? ஆனால் ராமனுக்குக் குழப்பம் இல்லை. பதினாறு கன்றுகளை ஒரு வரிசைக்கு நான்கு என்று வரும்படி பதினைந்து வரிசைகள் வருமாறு நட முடியும் என்பதைத் தெனாலிராமன் விளக்கினான். எப்படி?



பொற் கொல்லர் செய்த பதக்கம்

இன்னொருநாள் ராயரின் அவைக்கு ஒரு வியாபாரி வந்தார். அவரிடம் ஓர் அற்புதமான வைரம் இருந்தது. கோல்கொண்டாவின் வைரச் சுரங்கத்திலிருந்து அதைக் கொண்டு வந்ததாகக் கூறினார் அந்த வியாபாரி. அதன் அமைப்புத்தான் ராயருக்குப் பிடிக்கவில்லை. கோணல் மாணலாக — ஒருவிதத்தில் கிறிஸ்துவர்களின் சிலுவைக் குறி போலவும் கூட இருந்தது அந்தப் பெரிய வைரம். அது மட்டுமல்ல. அதன் நடுவில் ஒரு குழி வேறு இருந்தது. வைரங்களைச் சோதிக்கும் வல்லுநர்கள் வரவழைக்கப்பட்டார்கள். சோதனைக்குப் பின் அந்த வைரத்தை வீணாக்காமல் நான்கு துண்டுகளாக்கி ஒரு சதுரமாகவும் குழி சதுரத்தின் ஒரு மூலையில் வரும்படியும் அதைப் பதக்கமாகக் கட்டினால் அந்த வைரத்தினால் அதிர்ஷ்டம் கொழிக்கும் என்றார்கள். ராயருக்கு வைரத்தை விட மனமில்லை. ஆனால் இந்தக் கோணல் மாணல் வைரத்தை எப்படிச் சதுரமாக இணையும்படி நான்கு பாகமாக வெட்டுவது? பிரச்னைகள் ஏற்பட்டால் அவைகளைத் தீர்ப்பதற்குத் தெனாலிராமன் தான் இருக்கிறானே. ராயரின் ஆசையை நிறைவேற்ற வைரத்தை வெட்டிக் கொடுத்தான் ராமன். எப்படி? நீங்கள் தெனாலிராமனாக முடியாவிட்டால் (20) பக்கத்துக்குப்போனால் புரியும்.





கறுப்பு ஆடு

வாண்டுமாமா

அவன் பெயர் துரை.

'உபயோகமற்றது' என்று விட்டெறிந்த, காலி டப்பாக்கள் கண்ணாடிப் புட்டிகள்' காகிதம், அட்டைப் பெட்டி இப்படியான பொருள்களைச் சேகரித்துத் தன் தோள் மீது உள்ள கோணிப் பையில் போட்டுக் கொள்ளுவான் அவன். பிறகு தரம் பிரித்து அவைகளை வாங்கிக் கொள்ளும் கடைக்காரர்களிடம் கொடுத்துக் காசாக்குவான். அதைக் கொண்டு தன் பசியைத் தணித்துக் கொள்ளுவான். தன் மகன் துரை மாதிரி வாழ வேண்டும் என்று ஆசைப்பட்டுத்தான் அவன் அம்மா அவனுக்கு இந்தப் பெயரை வைத்திருக்க வேண்டும். ஆனால் அவன் இப்படி வாழ்வதைப் பார்க்க அவள் இப்போது இல்லை. துரைக்குத் தன் தாய் தந்தையரைப் பற்றித் தெரியவே தெரியாது.

துரை எந்த ஊரில் வாழுகிறான் என்று தெரிய வேண்டாமா உங்களுக்கு? அவனுக்கு வீடு வாசல் ஏதுமில்லாது போனாலும் அவன் வசிப்பதென்னவோ 'குளுகுளு' ஊட்டியில்தான்! ஊட்டியும் அதன் சுற்றுப்புற ஊர்களெல்லாம் அவன் ஆட்சி செலுத்தும் இடங்கள்.

அன்று துரைக்கு ரொம்ப மோசமான நாள். அவன் கோணிப் பையில் ஒன்றுமே சேரவில்லை. அவன் வயிற்றைப் போலவே அந்தப் பையும் சோர்ந்து கிடந்தது. ஒட்டுப் போட்ட கால்சராய் முட்டிக்கு மேலே. உடம்பைக் கவ்விப் பிடித்துள்ள ஒரு பழைய கம்பளிக் கோட்டு. தலையில் ராணுவத்துக்காரர் ஒருவர் கொடுத்த ஒரு குல்லாய். அந்த ஊட்டிக் குளிருக்கு இத்தனையும் போதாதே. ஊருக்கு வெளியே ஒரு வேலி ஓரத்தில் ஒரு பெரிய மரத்தடியில் சாய்ந்து அரைக் கண் மூடிக் கனவு கண்டு கொண்டிருந்தான் துரை. சுடச்சுட இட்டிலி, சாம்பார், ரொட்டி, வெண்ணெய். ஆகா! நாக்கினால் உதட்டைத் தடவிக் கொண்டான். 'கொர்' என்று ராகம் இசைத்த வயிற்றுக்கு 'ம்.... வெறும் கனவு' என்று சமாதானப்படுத்தினான். 'ஒரு சூடான டீ மட்டுமாவது கிடைத்தால் எவ்வளவு சுறுசுறுப்பாக இருக்கும்' என்றது உள்ளம். காலிக் கோணியைக் கை பரிதாபமாகத் தடவியது.

'இந்தக் கோணி நிரம்பினால் அதைப்போல் இனிமையான வாழ்க்கை ஏது?' என்ற நினைப்பில் கையில் குலுங்கும் சில்லறைக் காசுகளைக் கற்பனை செய்தவனை 'டிங்... டிங்..... டணங் ..... டணங்' என்ற சத்தம் உலுப்பி நிமிர்ந்து உட்கார வைத்தது. 'ஏதோ ஒரு தகர டப்பா.... பாறைகளில் பட்டு மோதி உருண்ட ஓசையல்லவா அது?' சுற்றுமுற்றும் பார்த்தான். ஒரு வயதான பாட்டியம்மா அந்த மலைப் பாறை முகட்டில் நின்று கீழே எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தான். பாட்டி தன் கைகளை உதறினாள். எம்பி எம்பிப் பார்த்தாள் பள்ளத்தாக்கை. ''என் அருமையான தகரக் குவளை. ஒரு நசுங்கல் கிடையாது. துளித் துரு கிடையாது. ஓட்டையில்லாத என் புத்தம் புதிய தகரக் குவளை. ஐயோ! போய் விட்டதே!'' என்று தவித்தாள் பாட்டி.

துரை எழுந்திருந்து பாட்டியிடம் போனான். அவனைப் போலத்தான் அவளும். ஏழைமைக் கோலம். நல்ல வயதான பழுத்த பழம் அந்தப் பாட்டி. ''என்ன பாட்டி...? என்னாலே ஏதாவது உதவி செய்ய முடியுமா ?'' என்று கேட்டான் துரை. பாட்டி அவனைப் பார்க்கவில்லை; பதில் சொல்லவில்லை. பள்ளத்தாக்கில் குதித்து விடுபவள் போல் எம்பி எம்பிப் பார்த்தபடி, ''என் அழகான குவளை. அது இல்லையானால் நான் பட்டினிதான்'' என்றாள். துரையும் எம்பிப் பார்த்தான். 'பெரும் பள்ளம்தான். ஈட்டி ஈட்டியாகக் கரடு முரடாக நீட்டிக் கொண்டுள்ள பாறைகள். கீழே — ரொம்ப ரொம்பக் கீழே ஒரு தகர டின்—டால்டா டின்—பளபளத்துக் கொண்டு கிடந்தது. ''டே, யம்மாடி! எம்மாம் தொலைவு போயிட்டுது? யாராலே இந்தப் பாறையிலே இறங்க முடியும்? பாட்டியம்மா பாவம் உன் குவளையை மறந்துடு'' என்றான் துரை, கீழே படுத்துக் குனிந்து பார்த்த



தனால் அழுக்கான கைகளைத் தட்டிக் கொண்டே.

''மறந்துடறதா? என் அருமையான தகரக் குவளையையா? முடியவே முடியாது. இதோ இந்த மூட்டையிலே டீப் பொட்டலம் இருக்கு. சர்க்கரை இருக்கு. சுடச் சுட இடியாப்பம் வாங்கி வைச்சிருக்கேன். என் குவளையை யார் எடுத்துத் தராங்களோ அவங்களுக்கு விருந்தே வைப்பேன்'' என்றாள் பாட்டி.

துரையின் பசித்த வயிறு சுருண்டு கொடுத்து முரண்டியது. அவன் வெறும் டீயைத்தான் எதிர்பார்த்தான். இப்போது இடியாப்பத்துடன் டீ!

''பாட்டி! கவலைப்படாதே. என் கோணிப் பையைக் கொஞ்சம் பார்த்துக்கோ'' என்று கூறிக் கோட்டைக் கழற்றிக் கோணியின் மீது போர்த்தி விட்டுப் பனியனோடு மெள்ளப் பள்ளத்தில் இறங்கலானான் துரை. தட்டுத் தடுமாறியபடி பாறைகளைத் தாவிப் பற்றிக் கொஞ்சம் கொஞ்சமாகக் கீழே இறங்கலானான். பாதி வழியில் மேலே அண்ணாந்து பார்த்தபோது பாட்டி முகம் மலரத் தன்னையே பார்த்துக் கொண்டிருப்பதைக் கண்டான்.

''மெள்ளப் பார்த்துப் போ தம்பி! என் தகரக் குவளையோடு திரும்பி வா'' என்றாள் பாட்டி. பாட்டியின் ஆசியும் முகமலர்ச்சியும் அவனைப் பெரிய ஹீரோவாக நினைக்க வைக்கவே பிடி தளர்ந்தது. அவ்வளவுதான்! என்ன நடந்தது என்பதை அறிவதற்குள் மலைச் சரிவில் கல்லும் மண்ணும் புரண்டு விழ அத்துடன் துரையும் சரிந்து கீழே கீழே போய்க் கொண்டிருந்தான். ''அடச்சே! ஒரு பழைய தகரக் குவளைக்காகவா இத்தனை பாடு?'' என்ற நினைப்பின் முடிவில் 'தொம்' என்று ஒரு புதரில் போய் விழுந்தான். அவன் தலைக்கு மேலாகச் சரிந்த மண்ணும் கல்லும் சொரிந்து கொண்டிருந்தன. எவ்வளவு சீக்கிரத்தில் கீழே வந்து விட்டான்! அட, அதோ அந்தப் புல் தரையில் அந்தக் குவளை சூரிய ஒளியில் பளபளத்துக் கொண்டிருந்தது. புத்தம் புதிய பெரிய டால்டா டின். பாட்டி சொன்னது நிஜம்தான். நல்ல அழகான பெரிய டின். 'இது என்னுடையதாக இருக்கக் கூடாதா?' என்று ஆசைப்பட்டது மனம். 'பத்துப் பதினைந்து கப் டீ போடலாம் இதில்' என்று எண்ணினபடி மேலே அண்ணாந்து பார்த்தான். பாட்டியை முகட்டில் காணவில்லை. நகர்ந்து போயிருப்பாள். அது சரி. வழுக்கிச் சரிந்து வந்தாகி விட்டது. எப்படி மேலே ஏறுவது?' என்ற குழப்பத்தோடு துரை அந்த இடத்திலிருந்து சுற்றுமுற்றும் பார்த்தான். அடுத்த நிமிஷம் அவன் கண்கள் பளபளத்தன. ''அடே! இதோ ஒரு பாதையே இருக்கே பக்கத்திலே. இது தெரியாமே எப்படியோ இறங்கி, எப்படியோ கீழே விழுந்து விட்டேனே'' என்று தனக்குத் தானே சொல்லிக் கொண்டு அந்த ஒற்றையடிப் பாதை வழியே மேலே ஏறலானான். ஏறிக் கொண்டிருக்கும்போதே ஒரு நினைவு. 'இந்த டின்னை ஒரு புதரில் ஒளித்து வைத்துவிட்டு, 'பாட்டி, டின்னைக் காணலியே என்று பொய் சொன்னால்?...' உடனே இந்தத் தகாத நினைப்புக்காகத் தன்னையே திட்டிக் கொண்டு மேலே ஏறியவன்; ''பாட்டி! இந்தா உன்னோட டால்டா டின். நல்ல வேளை சின்ன நசுங்கல்கூட விழல்லே'' என்று குவளையை நீட்டியவன், அங்கு பாட்டி மூன்று கற்களை அணைத்துச் சுள்ளிகளைச் சேமித்துத் தீமூட்டிக் கொண்டிருப்பதைக் கண்டான்.

''அதிலே தண்ணியை நிரப்பிக்கிட்டு வா தம்பி'' என்றாள் பாட்டி. புல் தரையில் வாழை இலை மீது நாலு இடியாப்பங்கள் இவனைப் பார்த்துச் சிரித்துக் கொண்டிருந்தன. 'இத்தனை நல்ல பாட்டிக்குத் துரோகம் செய்ய நினைச்சேனே' என்று வெட்கமடைந்தான் துரை. டால்டா டின்னில் நீர் கொண்டு வந்ததும் ஐந்தே நிமிஷங்களில் ஆவி பறக்கும் டீ தயாராகியது அதில். இடியாப்பமும் டீயும் அவன் பசித்த வயிற்றுக்கு எத்தனை இதமாக இனிமையாக இருந்தன தெரியுமா?

கிழவி சிரித்தாள். ''தம்பி! இதுலே டீ மட்டும்தான் தயாரிக்க முடியும்னு நெனைச்சியா? தப்பு. இதைக் கழுவிட்டு அந்த ஓடையிலேருந்து நிறையத் தண்

ணீர் மொண்டுக்கிட்டு வா. ஒரு துளிக் கூட கீழே சிந்தக் கூடாது'' என்றாள். துரை பாட்டி சொன்னபடியே செய்தான். பாட்டி நீர் நிறைந்த டால்டா டின்னைப் புல் தரைமீது வைத்து அதன் முன்னே மண்டியிட்டு அமர்ந்தாள்.

''என்ன ஏதாவது ஆருடம் சொல்லுமா உன் குவளை?'' என்றான் துரை.


''சந்தேகமில்லாமே. இரு வாரேன்'' என்று குவளையில் பளபளக்கும் நீர்ப் பரப்பையே பார்த்துக் கொண்டிருந்தாள் பாட்டி.

''எனக்காவது அதிர்ஷ்டமாவது ? துரதிர்ஷ்டத்துக்கும் எனக்கும்தான் ரொம்ப ராசி'' என்றான் துரை.

''உனக்கும் அதிர்ஷ்டம் வரப் போகுது. ஒரு கறுப்பு ஆட்டைச் சந்திக்கப் போறே. அதைப் பின் தொடர்ந்து போ. அதிர்ஷ்டம் தன்னாலே தேடி வரும் பாரு'' என்றாள் பாட்டி. தெளிந்த நீரில் ஏதோ சலனத்தைக் காண்பவள் போல. ''அது சரி தம்பி! நீ என்ன வேணும்னு ஆசைப்படறே? அதைச் சொல்லு'' என்று கேட்டாள்.

''என்னைப் போல வீடு வாசல் இல்லாம ஒரு ஊர்சுத்தி எதுக்கு ஆசைப் படுவான்? மழைக்கும் குளிருக்கும் அடக்கமா ஒரு குடிசை. குளிர் காய ஒரு கணப்பு. பயிர் செய்யக் கொஞ்சம் நெலம். இது இருந்தால் போதுமே? இந்த ஊர்சுத்திப் பொழைப்பை உதறிட்டு நிம்மதியான வாழ்க்கை நடத்துவேனே.... ம்... இதெல்லாம் கனவு. எங்கே நடக்கும்?'' என்று பெருமூச்சு விட்டான் துரை.


'' கறுப்பு ஆடு உன்னைத் தேடி வருது. நீ விரும்பற இத்தினியையும் அது உனக்குக் கொண்டு வருது. என் அருமைத் தகர டின்னைக் காப்பாற்றிக் கொடுத்த உனக்கு நிச்சயம் இந்த அதிர்ஷ்டம் வரத்தான் போகுது''. என்று கூறிய பாட்டி டால்டா டின்னிலிருந்த தண்ணீரைக் கொட்டித் துடைத்துத் தன் மூட்டைக்குள் வைத்துக் கட்டிக் கொண்டு கிளம்பினாள். பறங்கிப் பழம் போன்ற அவள் ஆடி அசைந்தபடி போவதையே பார்த்துக் கொண்டு வெய்யிலில் குளிர் காய்ந்தபடி உட்கார்ந்திருந்தான் துரை. தன் பசிக்குப்



பலகாரம் கிடைத்து விட்டதால் அவன் இப்போது அவசரப்படவில்லை.

கொஞ்ச நேரம் கழித்து அவன் தன் பிரயாணத்தைத் தொடங்கினான், பாட்டி போன அதே பாதையில். இரு பக்கமும் மலைகள் உயர்ந்து நின்றன. பாதையில் தன்னந் தனியே நடந்து போய்க் கொண்டிருந்தான் துரை. தனிமை, வறுமை, துரதிர்ஷ்டம், வேதனை இவைதான் அவன் இதுவரை வாழ்க்கையில் கண்டவை. அவனுக்காவது அதிர்ஷ்டம் வருவதாவது! 'கறுப்பு ஆடாம்' — சிரிப்பு வந்தது துரைக்கு. இந்த மலைக்காட்டில் ஆடாவது? ஒரு முயலைக் கூடக் காண முடியாது. தலைக்கு மேலாக ஒரு கறுப்புப் பறவை பாடிக் கொண்டு சென்றது. அழகான சின்னப் பறவை.

துரை மலைப் பாதையில் நடக்கலானான். எங்கே போகிறோம் என்ற நிச்சயமில்லாத பிரயாணம் அது. அருகே எங்கேயாவது ஒரு கிராமம் வராதா? கருங்குருவியின் குரல் 'கறுப்பு ஆடு — கறுப்பு ஆடு' என்று காதருகே ஒலிப்பது போலிருந்தது.



ஊட்டியின் குணம் உங்களுக்குத் தெரியுமா? திடீரென்று மேகங்கள் திரளும். மழை கொட்டும். பளீரென்று வெயில் அடிக்கும். அப்படித்தான் இப்போது மேகங்கள் ஒன்று சேரலாயின. துரை தன் கோணியைத் தோளில் போர்த்திக் கொண்டான். நடையை எட்டிப்போடலானான். ''சீக்கிரம் ஒரு கிராமத்துக்குப் போய்விடவேண்டும். நான் ஓர் அதிர்ஷ்டக் கட்டை. வீடில்லை. வாசல் இல்லை. நண்பர்கள் இல்லை. கோணிப்பை காலி. வயிற்றுப் பையும் காலி... கறுப்பு ஆடு என்னைத் தேடி வரப் போகிறதாம்... சரியான பாட்டி. அவளுடைய குவளையை மீட்டுக் கொடுத்ததற்காக ஏதோ உளறி விட்டுப் போயிருக்கிறாள் ஒரு வாலாட்டிக் குருவி பாறைக்குப் பாறை தாவியபடி ''க்விக்'' ''க்விக்'' என்று குரல் கொடுத்தது அந்த அமைதியில் இனிமையாக ஒலித்தது. தடதடவென்று அடித்துச் சொரிந்தது மழை. ஒரு பாறை இடுக்கில் ஒண்டிக் கொண்டான். மழை நின்றதும் மறுபடியும் தன் பிரயாணத்தைத் தொடங்கினான். அந்தப் பாதையின் முடிவில் வழி மூன்றாகப் பிரிந்தது. எந்த வழியே போவது?

'நேராகப் போ. இந்தப் பள்ளத்தாக்கில் நிச்சயம் ஏதாவது ஓர் ஊர் இருக்கும். ஊர் என்றால் வீடுகள். வீடுகள் இருந்தால் மனிதர்கள். மனிதர்கள் இருந்தால் உன் பசிக்கு ஏதாவது சம்பாதித்துக் கொள்ள முடியும்' ஆணையிட்டது மனம். அவன் தன் நடையில் வேகத்தைக் கூட்டியபோது ''ம்...மே...!'' என்று ஒரு ஈனமான குரல் வெகு தூரத்தில் கேட்டது.

துரையின் உடலில் ஓர் அதிர்ச்சி. ஆட்டின் குரல் அல்லவா? பாறைச் சுவர் வழியே எம்பிப் பார்த்தான்.

மறுபடியும் அதே குரல் — 'ம்...மே!' ''குட்டியின் குரலாக இருக்கே'' என்று குரல் வரும் சரிவில் மெள்ள இறங்கிப் பார்த்தான். அங்கே குடையாக நின்ற ஒரு பாறைக்குக் கீழே ஒரு கறுப்பு ஆட்டுக் குட்டி. ஆர்வத்தோடு அதை அள்ளி எடுத்து அணைத்துக்கொண்டான். ''எனக்கு ஒரு தோழனை விரும்பினேன். நீ கிடைத்துவிட்டாய். இத்தனை நேரம் இந்த மழைக்கு எங்கே இருந்தாய்? உன் மீது ஒரு பொட்டு ஈரமில்லையே? கதகதப்பாகக் காய்ந்திருக்கிறாய். என்னைப் பார். நனைந்து நமித்துப்போய்...'' ஆட்டுக் குட்டியோடு மேலே பாதைக்கு வந்தான் துரை. உடனே ஆடு அவன் அணைப்பிலிருந்து திமிறிக் கொண்டு விடுபட்டுக் கீழே குதித்தது. அது மட்டுமா? தன் குஞ்சுத் தலையால் அவனை முட்டியது. துரை சிரித்தான். ''நன்றி கெட்ட குட்டியே! உன்னைக் காப்பாற்றியதற்கு என்னை முட்டித் தள்ளுகிறாயா?'' என்றபடி முன்னேறினான், மூன்று வழிகளில் நடு வழியிலே. ஆனால் அவன் அந்தப் பாதையில் போவதை விரும்பாதது போலக் குட்டி ஆடு அவனை 'ம்...மே' என்று முட்டியது. ''உன்னோடுதான் வரணுமா? சரி... உன் வழி எது? இதோ வலப் பக்கமா?'' என்று கேட்டு நின்ற துரையை ஆட்டுக் குட்டி இடப் பக்கத்துப் பாதைக்கு முட்டித் தள்ளியது. ''இப்படி முட்டி முட்டியே என்னை நீ அதிர்ஷ்டத்துக்கு அழைத்துப் போகப் போகிறாயாக்கும்!'' என்று கேலியாகச் சிரித்தபடியே அது குறிப்பிட்ட பாதையில் நடந்தான். 'ம்...மே' என்ற வெற்றிக் குரல் எழுப்பி முன்னால் துள்ளி ஓடியது அந்தக் கறுப்பு ஆட்டுக் குட்டி. இருள் கவியும் நேரமாகி விட்டது.

முன்னால் போய்க் கொண்டிருந்த ஆட்டுக் குட்டி விநாடிக்கு விநாடி வளர்வதாகத் தோன்றியது துரைக்கு. கண்களைக் கசக்கிக் கொண்டு பார்த்தான். சூரியன் மறைந்து நிலவொளி வீசும் அந்த இரவிலே அவன் முன் போவது குட்டி ஆடல்ல. நல்ல பெரிய கறுப்பு மலையாடு. பின்னோக்கி வளைந்த நீண்ட கொம்புகள். துரைக்கு வியப்பான வியப்பு. முதலில் அலட்சியமாக நினைத்தவனிடம் இப்போது ஓர் அச்சம் புகுந்து கொண்டது. அவர்கள் நடந்த பாதை கரடுமுரடாக இருந்தது. அதுமட்டுமல்ல. அதற்கு முடிவே கிடையாதது போல் போய்க் கொண்டே இருந்தது. துரைக்கு நடந்து நடந்து கால்கள் சோர்ந்து விட்டன. பயம் வேறு பிடித்துக் கொண்டது. பொத்தென்று ஒரு பாறையின் மீது உட்கார்ந்து கொண்டான். முன்னால் போய்க் கொண்டிருந்த கறுப்பு ஆடு நின்று பார்த்துவிட்டுத் திரும்பி வந்தது துரையிடம்.

''இதோ பார், இனி என்னாலே ஓர் அடிகூட நடக்க முடியாது. அந்தப் பாட்டி குறிப்பிட்ட கறுப்பு ஆடு நீதான் என்றால் உனக்கு இங்கேயே ஒரு கும்பிடு. எனக்கு அதிர்ஷ்டமும் வேண்டாம், இந்த அவஸ்தையும் வேண்டாம். ஆளை விடு. ,நான் இங்கேயே தங்கப் போகிறேன்.'' மனிதரிடம் பேசுவது போல் அதனிடம் பேசினான் துரை. கறுப்பு ஆடு தன் தலையைத் தாழ்த்தியது. அடுத்த நிமிஷம் துரை பத்தடி தள்ளிப் புல் தரையில் போய்ப் பொத்தென்று விழுந்தான். அடுத்த விநாடி தலையைத் தாழ்த்திக் கொண்டு மறுபடியும் அவனை நோக்கி வேகமாக வந்தது ஆடு. துரை உடனே சட்டென்று அதன் கொம்புகளைப் பற்றிக் கொண்டான். ஆனால் அந்த ஆடு ஒரே வீச்சில் அவனை அள்ளித் தன் முதுகின் மீது போட்டுக் கொண்டது. துரை அதன் கொம்பின் பிடியை விடவில்லை. ஆடு தன் ஓட்டத்தை நிறுத்தவில்லை. இப்போது அதன் முதுகின்மேல் உட்கார்ந்திருந்தான் துரை. ஆடு காற்றினும் கடிதாகப் பறந்தது. எங்கே இப்படி ஓடுகிறது ? எதற்காக ? மேடு, பள்ளம், ஓடை, வாய்க்கால் இப்படி ஓடி முடிவில் ஒரு பெரிய பாறை இடுக்கில் புகுந்து மறுபடியும் ஓடியது.

ஆகா! என்ன அதிசயமான காட்சி? சமதளமான பரந்த புல்வெளி. அங்கு ஒரு சின்னக் கல் வீடு. நிலவொளியில் நன்றாகத் தெரிந்தது அந்தக் காட்சி. வீட்டின் அருகே ஒரு கிணறு. வீட்டைச் சுற்றி உயர்ந்த மரங்கள். கனி மரங்களோ? அந்தக் கல் வீட்டின் முன்னால் போய் நின்றது ஆடு. துரை கீழே குதித்தான். வியப்பும் திகைப்புமாகச் சுற்றுமுற்றும் பார்த்தான். 'ம்...மே...!' என்றது ஆடு. மெள்ளக் கதவின் அருகே போய் அதைத் தட்டி ''வீட்டிலே யாருங்க?'' என்று குரல் கொடுத்தான். அடுத்த நிமிஷம் ஆடு துரையைப் பின்னாலிருந்து ஒரு முட்டு முட்டித் தள்ளியது. அந்த எதிர்பாராத உந்தலில் கதவு 'படார்' என்று திறந்து கொள்ளத் துரை உள்ளே போய்த் தடுமாறி விழுந்தான். ''அட அதிர்ஷ்டக்கார ஆடே! என்னை இன்னும் எத்தனை தடவை இப்படி முட்டப் போகிறாய்? கதவு திறந்துதான் இருக்கிறதா?'' என்று கூறியபடி எழுந்தவன் பையிலிருந்த நெருப்புப் பெட்டியை எடுத்து ஒரு குச்சியைக் கிழித்து இருளை விரட்டினான். எதிரில் ஒரு சிம்னி விளக்கு இருந்தது. அதை ஏற்றிக் கொண்டான். வீட்டை நோட்டம் விட்டான். கல் சுவர் உறுதியாக இருந்தது. கூரை கெட்டி, ஒழுகாது. ஒரு மூலையில் படுக்கை போன்ற மேடை. சின்ன அறைதான். ஆனால் சுத்தமாக இருந்தது. 'பாழடைந்த வீடல்ல. ஆனால் யாரையும் காணோமே! மனிதர்கள் வசித்து வெகு நாட்களாகியிருக்கும் போலும். ஆனாலுமென்ன? என் கனவு மாளிகைதான் இது. பாட்டி மாயப் பாட்டியோ? கதைகளில்தான் இப்படி மாயா ஜாலங்கள் வரும். நிஜமாகவே இப்போது... ஒருவேளை இது அந்தப் பாட்டியின் வீடுதானோ? அந்தக் கறுப்பு ஆடு...?' வெளியே 'ம்மே....' என்ற குரல் கேட்டது. வாசலுக்கு ஓடினான் துரை. கறுப்பு ஆடு நிதானமாக நடந்து போய்க் கொண்டிருந்தது.

''எங்கே போகிறாய்? எனக்கு வீட்டையும் வாழ்வையும் காட்டிவிட்டு நீ இப்படி ஓடிப் போகலாமா? திரும்பி வா. உனக்கு ஒரு துணையைத் தேடித் தருகிறேன். நாம் இந்த வீட்டில் வாழலாம். என் கனவு நினைவாகி விட்டது.''

''ம்...மே!'' என்று குரல் கொடுத்துவிட்டு ஆடு மறைந்துவிட்டது.

துரை இப்போது அந்தச் சின்னக் கல் வீட்டில் சுகமாக வாழுகிறான். குளிருக்குக் கதகதப்பான வீடு. உணவுக்குப் பஞ்சமில்லை. உருளைக்கிழங்கும் காரட்டும் கோசும் காலிபிளவரும் அவன் வீட்டைச் சுற்றிச் செழித்துக் கிடக்கின்றன. ஆடும் மாடும் கோழிகளும் பல்கிப் பெருகிவிட்டன. ஆனாலும் அவன் தினமும் யாரையோ எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறான், வளைந்து செல்லும் ஒற்றையடிப் பாதையையே பார்த்துக்கொண்டு. யாரை? அந்த டால்டாடின் பாட்டியையா? அல்லது அந்தக் கறுப்பு ஆட்டையா?



சுண்டு குண்டு சீமாத் தாத்தா

சாமா

வீட்டில் ஓரே புகை. 'ஏதேனும் பட்சணம் செய்து வைத்தால் குழந்தைகள் தின்னும்' என்று பழியைச் சுண்டு குண்டு மேல் போட்டுவிட்டு சீடை, முறுக்கு, ஸ்வீட் எல்லாம் ஏராளமான செலவில் தயாராகிக் கொண்டிருந்தன. பாட்டிக்கு நொறுக்குத் தீனி இல்லாமல் இருக்க முடியாது. ஆகவேதான் இந்தப் பட்சணங்கள் தயாராயின. சீமாத் தாத்தாவுக்கும் இந்தச் சபலம் உண்டு. அதனால் பாட்டிக்கு ஒத்தாசையாக அவரும் பட்சணம் தயாரிப்பதில் ஈடுபட்டார்.

பட்சணங்கள் தயாராகி பிளாஸ்டிக் டப்பாக்களில் ஜாக்கிரதையாக வைக்கப்பட்டன. சுண்டுவும் குண்டுவும் அடுப்படியிலேயே நின்றிருந்தபடியால் அவர்களுக்கும் கொஞ்சம் கொடுக்கப்பட்டது. கொஞ்சமாகக் கொடுக்கப்பட்டதால் அதன் ருசியும் பிரமாதமாக இருந்தது.

தாத்தா சுண்டு குண்டுவைப் பார்த்து, ''பசங்களா, நானும் பாட்டியும் புராணப் படம் ஒன்று பார்க்கப் போகிறோம். நீங்களும் பார்க்க வேண்டுமென்றால் எங்களுடன் தாராளமாக வரலாம்'' என்றார்.



''போர்! போர்! புராணப் படம் 'போர்'. நாங்கள் வரவில்லை'' என்று சொல்லி அங்கிருந்து ஓட்டம் பிடித்தார்கள் சுண்டுவும் குண்டுவும்.

சீமாத் தாத்தா, ''பசங்களா படத்துக்கு வராவிட்டால் பரவாயில்லை. இதோ பார், கணக்கு, அல்ஜீப்ரா, சரித்திரப் புத்தகம் எல்லாம் உங்களுக்காக ஒரு சிநேகிதரிடமிருந்து வாங்கி வந்திருக்கிறேன். ரொம்ப எளிமையாகவும் புரியும்படியும் எழுதப்பட்டவை. இதோ இந்தப் பெரிய 'செஸ்ட் ஆஃப் டிராயர்ஸி'ல் அவைகளை வைத்திருக்கிறேன். பொழுதை வீணாக்காமல் படியுங்கள்'' என்று அவர்கள் காதில் விழும்படி இரைந்து கத்தினார். பிறகு பாட்டியுடன் சினிமாவுக்குக் கிளம்பிப்போனார்.



சுண்டுவும் குண்டுவும் படிக்கவா செய்வார்கள்? பாட்டி செய்த பட்சணங்களை ருசித்தவர்களாயிற்றே! ஆகவே எப்படியேனும் அந்தப் பட்சணங்களை இன்று ஒரு கை பார்த்துவிடுவது என்று தீர்மானம் செய்த சுண்டுவும் குண்டுவும் தாத்தாவும் பாட்டியும் போனதும் பட்சணங்களை ஒளித்து வைத்திருக்கும் இடத்தைத் தேட ஆரம்பித்தனர். சாமான் உள் சாவி கிடைத்தது. ஆனால் பட்சண டப்பாக்கள் கிடைக்கவில்லை.

சாயங்காலம் நாலரை மணி வரை வீட்டில் ஓர் இண்டு இடுக்கு விடாமல் தேடினார்கள். உடம்பெல்லாம் ஒட்டடையும் அழுக்குமானதுதான் மிச்சம்.

மாலை மணி ஆறு அடித்தது. சீமாத் தாத்தாவும் பாட்டியும் உள்ளே நுழைந்தார்கள். தாத்தாவின் முகம் மட்டும் வாட்டமாக இருந்தது. பாட்டி முகம் மலர்ந்திருந்தது. சீமாத் தாத்தாவின் முகம் வாட்டமாக இருந்ததற்குக் காரணம் அவர் சினிமாப் பார்ப்பதற்குச் சென்றபோது மூக்குக் கண்ணாடியை எடுத்துப் போக மறந்து விட்டார். அது 'செஸ்ட் ஆப் டிராயர்ஸி'ல் சுண்டு குண்டு படிக்க வேண்டிய பாடப் புஸ்தகங்களுடன் இருந்தது. பட்சணங்களையும் அதன் பின்னால்தான் ஒளித்து வைத்து விட்டுப் போயிருந்தார், புஸ்தகங்களின் அருகேகூட சுண்டுவும் குண்டுவும் போக மாட்டார்கள் என்ற நம்பிக்கையில். பட்சணங்களை அவர்களிடமிருந்து காப்பாற்ற இதுதான் வழி என்று தாத்தாவுக்குத் தெரியும். அதன்படியே பட்சணங்களும் ஜாக்கிரதையாகவே இருந்தன.

ஆனால் மூக்குக் கண்ணாடி இல்லாமல் சீமாத் தாத்தாவுக்குச் சினிமாவே ரசிக்கவில்லை. அதைவிட பட்சணங்களைப் பசங்களிடம் கோட்டை விடாமல் காப்பாற்ற முடிந்ததில் அவருக்குத் திருப்தி. பட்சணம் இருந்த இடம் தெரிந்தபோது சுண்டுவுக்கும் குண்டுவுக்கும் அசடு வழிந்தது.



கண்ணன் பட்டம்!

'அப்பாவிக் கவிஞன்'

பட்டம் ஒன்று பறக்குது!
பாய்ந்து வானில் பறக்குது!
எட்டி எட்டிப் பறக்குது!
ஏறி இறங்கிப் பறக்குது!

மாட்டு மந்தைக் கூட்டமதை
மயக்கக் குழல் ஊதிடும்
சேட்டைக்காரக் கண்ணனின்
செல்லக் கையில் இருக்குது!


குஞ்சம் கோத்த நீண்ட வால்
மிஞ்சி ஓடப் பார்க்குது!
மஞ்சு வந்து மறைப்பதால்
அஞ்சி அஞ்சி ஒதுங்குது!

பட்டத் தோடு நானுமே
பறந்து வானில் நீந்தியே
வட்டம் போட நினைக்கிறேன்.
வழியும் தெரிய வில்லையே!

சந்தேகம்

எஸ். எல்.

காகம் இருந்த சுவர்
கல்லா, மண்ணா?
குருவி பறந்த திசை
கிழக்கா, மேற்கா?
யானை ஒடித்த கிளை
அரசா, வேம்பா?
குதிரை பறித்த குழி
குளமா, குட்டையா?
பூனை ஈன்ற நாள்
புதனு, சனியா?
புறு பூப் போட்டது
புளுகா, நிஜமா?
கழுதை தின்ற தாள்
கறுப்பா, சிவப்பா?
கமலுவின் சந்தேகம்
கணக்கா, வழக்கா?



நிச்சயம்!


அழகு. பழனிச்சாமி


வட்ட நிலா வானில் வந்தால்
வண்ண ஒளி நிச்சயம்!
திட்டமாகப் படித்தி ருந்தால்
தேர்வில் வெற்றி நிச்சயம்!

அழுக்கு இல்லா ஆடை தன்னில்
அழகு உண்டு நிச்சயம்!
இழுக்கு இல்லா வாழ்வு தன்னில்
ஏற்றம் உண்டு நிச்சயம்!

துன்பம் வந்து சூழ்ந்த போதும்
துணிவு வேண்டும் நிச்சயம்!
இன்ப வாழ்வு வாழ வேண்டின்
எழுச்சி வேண்டும் நிச்சயம்!


அன்பு நிறைந்த வாழ்வு தன்னில்
அறிவு வளரும் நிச்சயம்!
அன்பும் அறிவும் இணைந்த வாழ்வை
அகிலம் போற்றும் நிச்சயம்!






17
வீராதி வீரன்
லீலாவின் விரல்கள் கைத்துப்பாக்கியின் விசையை அழுத்த, காவல் வீரர்கள் கதி கலங்கித் தடுமாறி ஓட, கடைத் தெருவில் குழப்பம் ஏற்பட்டது. அவர்களுக்கு வேண்டியதும் அதுதான்..
லீலா.. ஓடு. நாம் தப்ப இதுதான் தக்க சூழ்நிலை. ஜிம்மியும் ஜும்புவும் நம்மைப் பின் தொடருவார்கள்.
நவீன்! நீ ஒளிந்து கொண்டதும் நல்லதாகப் போயிற்று.
கதை: கௌசிகன்
சித்திரம்: ரம்மி..
நவீன் அந்தப் பாதாளக் கிடங்கைக் காட்ட....
அடேயப்பா, எத்தனை ஆயுதங்களைச் சேமித்து வைத்திருக்கிறார்கள். இந்தப் பாதாளக் கிடங்குக்குள்...!
தப்பி வெகு தூரம் வந்த பிறகு ஓர் இடத்தில்..
ரஹீம் பாகிஸ்தானியரின் ஒரு ஆயுதக் கிடங்கு இருக்குமிடம் எனக்குத் தெரியும். அதை நாம் அழித்தால் முக்தி வாஹினிக்கு ரொம்ப உதவியாக இருக்கும்.
எங்கே, இடத்தைக் காட்டு.
எல்லாம் புத்தம் புதிய துப்பாக்கிகள்.
சீனத்துச் சரக்கு. முத்திரைகளைப் பார்த்தாயா?
உண்மைதான் இம் மாதிரித் துப்பாக்கிகளை நான் பார்த்ததே இல்லை. இதை இயக்குவது எப்படி?
லீலா அந்தப் புது விதத் துப்பாக்கியைச் சோதித்துக் கொண்டிருக்கும் போது, அது கை தவறிக் கீழே விழ, அதே சமயம் அதன் விசை தானே இயங்கி ஒரு குண்டு அதிலிருந்து பறந்தது.


நவீன் உடனே லைலாவின் தலைக் காயத்துக்குக் கட்டு போட்டான். ஆனாலும்...
நவீன் லைலாவுக்கு நினைவு திரும்பவில்லை. காயம் ஒரு வேளை அபாயம் நிறைந்ததாக இருக்குமோ?
நவீன்! எனக்கொரு உபாயம் தோன்றுகிறது. நீ இங்கு வா சொல்லு கிறேன்...
காயமடைந்தவருக்குக் கட்டுப் போடுவது போல் எனக்குப் பாண்டேஜ் கட்டு. நான் அவர்களாக உருமாற வசதியாக பாகிஸ்தானி வீரனின் உடையும் தொப்பியும் உள்ளன. நீ கவனமாக - இங்கேயே இரு. நான் டாக்டருடன் வருகிறேன்.
கட்டுப் போட்ட பாகிஸ்தானி வீரனாக ரஹீம் பாதாளக் கிடங்கிலிருந்து வெளியேறுகிறான்.
அதோ பாக் ராணுவ முகாம். அங்கு எப்படியும் ராணுவ டாக்டர் இருப்பார். அவரை இங்கு கடத்தி வர வேண்டும். அல்லாதான் துணிவும் துணையுமாக இருக்க வேண்டும்.
யாரப்பா நீ? பெட்டிலிருந்து இந்த நிலையில் ஏன் எழுந்து வந்தாய்? அடடே, தடுமாறி விழுந்து விடுவான் போலிருக்கிறதே... இதோ...


டாக்டர் தாங்கிப் பிடிக்க அருகே சென்ற போது கைக் கட்டுக்குள்ளி ருந்த கைத் துப்பாக்கியை ரஹீம் தயாராக எடுத் துக் கொண்டான்..
ஒரு சிறு முனகல் கூட ஏற்படுத்தாமல் மருந்துப் பெட்டியுடன் என்னுடன் கிளம்புங்கள்...ம்..
ரஹீமும் டாக்டர் மருந் துப் பெட்டியுடன் வெளி யேறிய போது காவல் காரர் மரியாதை செலுத்தி வழி விட்டார்...
நவீன், சலவா எப்படி இருக்கிறன்? இதோ டாக்டருடன் வந்து விட்டேன். கவலைப் படாதே.
காயம் எப்படி ஏற்பட்டது? துப்பாக்கிக் குண்டல்லவா பாய்ந்திருக்கிறது. ரொம்ப சீரியஸ்.
நான் இங்கே ஏதும் செய்வதற்கு இல்லை. இவனுக்கு உடனே ரத்தம் செலுத்தி ஆபரேஷன் செய்து குண்டை வெளியே எடுத்தாக வேண் டும். ஆஸ்பத்திரிக்கு உடனே கொண்டு போகா விட்டால் ஆபத்து....
பாக் டாக்டரின் வஞ்சகம் புரியாத ரஹீம் உடனே தன் தோழன் கொண்டுவந்த கழுதையின் முதுகில் சலோவுக்கு ஸ்ட்ரெச் சர் தயாரித்து அவனை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்ல ஏற்பாடு செய்தான்.
தொடரும்..

'டார்ச்' விளக்கு





எந்த ஒரு பொருளையும் அது எப்படி இயங்குகிறது என்பதை அறிய வேண்டுமானால் அவைகளை அக்கு வேறு ஆணி வேறாகப் பிரித்துப் பார்த்தால்தான் முடியும். ஆனால் மறுபடியும் அவைகளை முறைப்படி இணைக்கத் தெரிந்திருக்க வேண்டும் !


'டார்ச்' விளக்கு எப்படி வேலை செய்கிறது? இதைப் பாகம் பாகமாகப் பிரிப்பது சுலபம். தவிர இதில் அப்படியொன்றும் அதிகமான பாகங்கள் கிடையாது. கழற்றியவைகளை இணைப்பதும் சுலபம். டார்ச் விளக்கில் இரு முக்கியமான உறுப்புக்கள் பல்பும் பாட்டரியும்தான். சில டார்ச் விளக்குகளில் ஒன்றுக்கு மேற்பட்ட பாட்டரிகள் இருக்கும். பாட்டரிகள் கூடுதலானால், வெளிச்சமும் கூடுதல், அதன் ஆயுளும் கூடுதல். ஒரே ஒரு பாட்டரியுள்ள சின்ன டார்ச் விளக்கை நாம் ஆராய்வோம்.


டார்ச்சிலுள்ள விசைப் பொத்தானை அழுத்தியதும் பாட்டரியிலிருந்து மின்சாரம் உற்பத்தியாகி பல்புக்குப் பாய்கிறது. இந்தச் செயலில் சிறிய பல்பு மின்சார விளக்காகச் செயல்படுகிறது. பல்பினுள்ளே இருக்கும் ஃபிலமெண்ட் ஒளியை உமிழுகிறது.

உன்னிடம் ஒரு பழைய பாட்டரி இருந்தால் அதை வெட்டி உள்ளே என்னென்ன இருக்கிறதென்று பார். இதைச் செய்யும் போது எச்சரிக்கையோடு செயல்பட வேண்டும். பாட்டரியை வெட்டும்போது கையையும் வெட்டிக் கொண்டு விடப் போகிறாய். பாட்டரியினுள்ளே நடுவில் ஒரு கறுப்புக் குச்சி இருக்கும். இது கார்பன், கரி. இவற்றைச் சுற்றி ஒரு கறுப்புப் பொடி இருக்கும். இது ஒரு துணிப் பையில் இறுக்கமாக அடைக்கப் பட்டிருக்கும். உலோகப் பெட்டிக்கும் இந்தக் கறுப்புப் பொடிக்கும் இடையிலே ஒரு வகைப் பசை இருக்கும். இது ஸால் அம்மோனியா. இந்தப் பசையையும் கறுப்புப் பொடியையும் பிரிக்கிறது, துணிப் பை. பாட்டரியின் வெளிப்புறச் சுவர் துத்தநாகத்தினால் ஆனது. துத்தநாகப் பெட்டிக்குள் இவைகளைச் சீல் செய்திருப்பது 'பிட்ச்' என்ற ஒரு வகை கீலினால். இது தாரிலிருந்து கிடைக்கும் கழிவுப் பொருள். பிட்சுக்கு மேலே நீட்டிக் கொண்டுள்ள கார்பன் குச்சியின் முனைக்குப் பித்தளைத் தொப்பி கொண்டு மூடப்பட்டிருக்கும். இவைதான் பாட்டரியின் அமைப்பு.

பாட்டரி பல்பை எரியச் செய்ய வேண்டுமானால் ஒரு மின்சார சர்க்யூட் ஏற்பட வேண்டும். இது மிகச் சுலபம். கடையில் பாட்டரி வாங்கும்போது அது உயிருள்ளதா என்பதை நமக்குக் காட்டக் கடைக்காரர் என்ன செய்கிறார்?

A: கார்பன் குச்சி
B: கறுப்புப் பொடி
C: ஸால் அம்மோனியா பசை
D: துத்தநாக வெளிச் சுவர்
E: பிட்ச்
F: பித்தளைத் தொப்பி







கவனித்திருக்கிறீர்களா? ஒரு சிறு பல்பைப் பித்தளைத் தொப்பி மீது வைத்து அத்துடன் இணைத்த ஓர் ஒயரைப் பாட்டரியின் அடியில் இணைத்துக் காட்டுகிறார். பல்ப் பளிச்சிடுகிறது. இந்த இணைப்பினால் பாட்டரியில் ஏற்படும் மின்சாரம் பல்பில் பாய்ந்து மறுபடியும் ஒயர் வழியே பாட்டரியையே அடைந்து ஒரு முழு மின்சார வழியை, சர்க்யூட்டை, ஏற்படுத்தி விடுகிறது.


அது சரி 'ஒரு டார்ச் விளக்கில் இந்த மின்சார வழி — சர்க்யூட் — எப்படி ஏற்படுகிறது? முன் பக்கத்திலுள்ள படத்தைப் பாருங்கள். டார்ச்சின் அடியில் இருக்கும் ஸ்பிரிங்; பாட்டரியின் பித்தளைக் குல்லாய், பல்பின் அடியில் உள்ள பட்டனோடு எப்போதும் இணைந்திருக்கும்படியான காரியத்தைச் செய்கிறது. டார்ச் விளக்கின் பக்கவாட்டிலுள்ள பொத்தானை நாம் மேலே அழுத்தி ஏற்றும்போது அத்துடன் இணைந்துள்ள பித்தளைத் தகடு, பல்பை இணைத்துள்ள உலோகப் பகுதியோடு தொடர்பு கொள்ளுகிறது. மின்சாரம் பாட்டரியிலிருந்து பல்பில் பாய்ந்து பிறகு டார்ச் விளக்கின் உலோகச் கவர்வழியே மறுபடியும் பாட்டரியின் அடிப்பாகத்தை அடையச் சர்க்யூட் பூர்த்தியாகிறது. பொத்தானை நாம் கீழே அழுத்தித் தள்ளும்போது பல்பை இணைத்துள்ள உலோகப் பகுதியோடு பித்தளைத் தகட்டில் தொடர்பு துண்டிக்கப்படுகிறது. டார்ச் விளக்கின் உலோகக் குழாய் — மெட்டல் கேஸ் — மின்சார ஒயராகச் செயல்படுகிறது. பல்ப் எரியும் போது பிரகாசமான ஒளியைப் பிரதிபலிக்க, பல்ப் பொருத்தப்பட்டுள்ள கிண்ணத்தின் உட்புறத்தில் வெள்ளி முலாம் பூசப்பட்டிருக்கும்.

இனி டார்ச் விளக்கை அழுத்தும் போது, ''இது எப்படி எரிகிறது என்று எனக்குத் தெரியுமே'' என்ற எண்ணம் ஏற்படும் உங்களுக்கு, இல்லையா?

கிருஷ்ண தேவராயருக்குத் தெனாலிராமன் மாங்கன்றுகளையும் வைரத்தையும் அமைத்துக்காட்டியது இப்படித்தான்.







பேனாக் கத்தி

ரமணியின் பிறந்த நாள் பரிசாக அவன் மாமா அவனுக்கு ஒரு பொருள் பரிசளித்தார். அது என்ன தெரியுமா? ஓர் அழகான பேனாக் கத்தி. விசேஷமானதும்கூட. ஏதாவது விளையாட்டுப் பொம்மையை எதிர்பார்த்திருந்த ரமணிக்கு இது ஏமாற்றத்தை அளித்தது. கோபத்துடன் அதை மேஜையின் மீது விசி எறிந்தான். பிரித்த நிலையிலிருந்த அது மேஜைப் பலகையில் போய் செருகிப் பதிந்து குத்திட்டு நின்றது.

உற்சாகமில்லாத அவன் முகத்தைக் கண்ட மாமா, ''ரமணி! இதன் மகிமையைப் பற்றி உனக்குத் தெரிந்தால் இப்படி நினைக்க மாட்டாய். இதோ பார்த்தாயா, இதில் கார்க்கை எடுக்கும் ஸ்குரு, ஆணியைக் கழற்றி முடுக்க உதவும் 'ஸ்குரு டிரைவர்', சின்ன அரம், இன்னொரு சின்னக் கத்தி, ஒரு குத்தூசி இவ்வளவும் கொண்டதாக்கும் இந்தப் பேனாக் கத்தி. இதனால் ஆகாததே ஒன்றும் கிடையாது. திறமைசாலியின் கையில் இந்த ஒரு கத்தி மட்டும் இருந்தால் போதும், எத்தனையோ அற்புதமான வேலைகளைச் செய்து விடுவான்'' என்றார்.

''இதற்கு இத்தனை மகத்துவமா, மாமா?'' என்றாள் அப்போதுதான் அங்கு வந்த ரமணியின் தங்கை உஷா.

''மகத்துவம் மட்டுமா? நான் பிறந்து உருவான கதையைக் கேட்டால் நீங்கள் இன்னும் திகைத்துப் போவீர்கள்'' என்றது ஒரு குரல். ரமணியும் அவன் தங்கை உஷாவும் ஆச்சரியத்துடன் பார்த்தார்கள். மேஜையின் மீது குத்திட்டு நின்று கொண்டிருந்த பேனாக் கத்திதான் பேசிற்று.

ரமணிக்கும் உஷாவுக்கும் வியப்பான வியப்பு. பேனாக் கத்தி பேசினால் வியப்பாக இருக்காதா?

''எனக்குப் பேனாக் கத்தி என்று ஏன் பெயர் வந்தது தெரியுமா உங்களுக்கு?'' என்று வினா எழுப்பியது கத்தி.

''வந்து...'' என்று ஏதோ சொல்ல ஆரம்பித்தான் ரமணி. ஆனால் முடிக்காமல் மௌனமானான்.

''உங்களுக்குத் தெரியாது. நானே சொல்லுகிறேன்'' என்று சொல்லியது கத்தி. ''எனக்கும் இன்றுள்ள பேனாவுக்கும் சம்பந்தமே இல்லை. ஆனால் இறகுப் பேனாவினால் எழுதிய அந்தக் காலத்தில் பறவையின் இறகுகளைச் சீவுவதற்கு ஒரு சின்னக் கத்தியைப் பிரத்தியேகமாகப் பயன்படுத்தினார்கள். ஆகவே அதைப் 'பேனாக் கத்தி' என்றழைக்கலானார்கள்.

''மனிதர்களுக்காக நான் உழைக்கிறேன். ஆனால் என்னை உருவாக்க எத்தனை பேர் உழைத்திருக்கிறார்கள், தெரியுமா? சுரங்கத் தொழிலாளி பூமியின் அடியிலிருந்து இரும்புத் தாதுவைக் கொண்டு வந்து குவித்தான். இந்தத் தாதுவிலிருந்து இரும்புத் தொழிற்சாலைத் தொழிலாளி தேன் இரும்பை உருவாக்கினான். தேன் இரும்பிலிருந்து எஃகைத் தயாரித்தான் வேறொரு தொழிலாளி. எஃகு—உருக்கு இரும்பிலிருந்து இரும்புத் தகடுகளை உருவாக்கினான் ஒருவன். தகடுகளை வெட்டி

என்னை உருவாக்கினான் வேறொரு தொழிலாளி.

''இரும்புத் தாது' பூமியிலிருந்து வெட்டி எடுக்கப்படுகிறது. இதைத் தோண்டி எடுக்கப் பலவித யந்திரங்கள் இருக்கின்றன. இரும்புக் கனிஜத்தை ரயில் வண்டி மூலம் வாகன்களில் ஏற்றித் தொழிற்சாலைக்குக் கொண்டு வருகிறார்கள். பத்து மாடிக் கட்டடத்தைப் போல் இரும்பு உலைகள் பிரம்மாண்டமானதாக இருக்கும். ரயில் வாகன்களிலிருந்து மண்ணோடு கலந்த இரும்புத் தாது பெரிய புனல்கள் வழியாகப் பெரிய தொட்டிகளுக்கு மாற்றப்



படும். இந்தத் தொட்டிகள் மின்விசையால் உலைகளின் உச்சிக்குக் கொண்டு போகப்பட்டு அதனுள் கவிழ்க்கப்படும். இத்துடன் இன்னும் சில பொருள்களும் உலைக்குள் செல்லும். வெறும் இரும்புத் தாது மட்டும் இரும்பாக உருகி வந்து விடாது. கால்ஷியம் கார்பனேட், 'கோக்' என்று சொல்லப்படும் ஒருவகை நிலக்கரி இவை இரண்டும் இரும்புத் தாதுவோடு கலக்கப்படுகின்றன. இவை இரண்டும் மண்ணோடு கலந்திருக்கும் இரும்பைத் தனியாகப் பிரித்து உருகி ஓடச் செய்யும்.

''இந்த உலைகளின் உள்ளே எத்தனை உஷ்ணமாக இருக்கும் தெரியுமா .....? கல்கூடக் கருகிச் சாம்பராகிவிடும். இந்த உலைகளுக்குள் நடக்கும் காரியத்தைக் காண, கறுப்பு மைக்கா பொருத்தப் பட்ட சிறிய ஜன்னல்கள் இருக்கும். இதன் வழியாகப் பார்த்தால், வெண்மையாகத் தகதகக்கும் 'கோக்' துண்டுகளையும், குழம்பாக இரும்பு உருகி ஓடுவதையும் காணலாம்.

''இரும்புத் தாதுக் கலவையை உலைக்குள் போட்ட ஒவ்வொரு நான்கு மணி நேரத்துக்கு ஒருமுறை உலையின் அடியில் உள்ள ஓர் அடைப்பானைத் திறப்பார்கள். திறந்ததும் பளீரென்று சுடர்விடும் அக்னி ஆறுபோல் உருகிய இரும்பு, குழம்பாக வெளியில் ஓடி வரும். இதற்கெனக் களிமண்ணினால் அமைத்த வாய்க்காலின் வழியே ஓடி வந்து பிரம்மாண்டமான கொப்பரையில் போய் விழும். உடனே உலையின் துவாரத்தைக் களிமண்ணைக் கொண்டு அடைத்து விடுவார்கள்.

கொப்பரையில் தகதகக்கும் இந்த இரும்புக் குழம்புக்குத்தான் தேனிரும்பு என்று பெயர். இதை இன்னோர் உலைக்குக் கொண்டு போவார்கள். இந்த உலையில் தேன் இரும்போடு ஓட்டை உடைசல் இரும்புச் சாமான்களை எல்லாம் சேர்ப்பார்கள். துருப் பிடித்த தண்டவாளங்கள், உடைந்த எஞ்சின் சக்கரங்கள் இப்படி உதவாத பல இரும்புச் சாமான்களை இதற்குள் தள்ளுவார்கள். கொதிக்கும் தேனிரும்புக் குழம்பிலே போட்டதெல்லாம் கரைந்து கலந்துவிடும். இப்போதுதான் எஃகு என்ற உருக்கு இரும்பு உதயமாகிறது. இந்த எஃகிலிருந்துதான் சகலவிதமான யந்திரச் சாதனங்களும் ஆயுதங்களும், தயாரிக்கப்படுகின்றன. மிக்க உறுதி வாய்ந்தது இந்த எஃகு.


'' எஃகு இரும்பினால்தான் என் உடம்பு செய்யப்பட்டிருக்கிறது. நான் இந்த உருவத்தை அடைய இன்னும் எத்தனையோ மாறுதல்கள் அடைய வேண்டியிருந்தது. நீர்போல இளகிய

எஃகு இரும்பான என்னைப் பெரிய பெரிய அச்சுக்களில் ஊற்றுவார்கள். இந்த அச்சுக்களை நன்றாகக் குளிரவிடுவார்கள். பிறகு மறுபடியும் என்னைப் பழுக்கக் காய வைத்து இதற்கெனப் பிரத்தியேகமாக உள்ள உருளைகளின் மீது நெருப்புத் துண்டம் போன்ற என்னை வைத்து அங்கும் இங்கும் பல நடவைகள் போகும்படி உருட்டுவார்கள். இப்படி உருள உருளத் துண்டம் போன்ற நான் நீட்டப்படுவேன். மற்றோர் உருளைப் படுக்கையில் நீண்டுவிட்ட என்னைத் தள்ளுவார்கள். இங்கு நான் தகடாகப் பரத்தப்படுவேன்.

''காகிதத்தை நீ கத்தரிக்கோலால் கத்தரிப்பது போல் எஃகுத் தகட்டைக் கத்தரிக்க உறுதியான பல கத்தரிகள் தொழிற்சாலையில் உண்டு. எஃகுத் தகடாகிவிட்ட என்னைப் பல நீண்ட துண்டுகளாகவும், அந்தத் துண்டுகளைச் சிறு சிறு துணுக்குகளாகவும் வெட்டுவார்கள். இந்த எஃகுத் துண்டுகள் கத்தியாகி விடாது. இனிமேல்தான் எனக்கு உருவம் கொடுக்கப்படுகிறது. என்னைப் போன்ற் உருவ அமைப்பில் பள்ளமுடைய எஃகு மேடை மீது ஓர் எஃகுத் துண்டு வைக்கப்படும். ஒரு யந்திரம் பலமான சம்மட்டியால் இந்தத் துண்டு எஃகை அசுர வேகத்தோடு வந்து தாக்கும். சம்மட்டியின் அடியிலும் என் உருவத்துக்குப் பள்ளம் இருக்கும். அப்போது நான் என் உருவத்தின் முதல் நிலையை அடைவேன். முதல் நிலைதான். இப்போது என் நாக்கு (கூரான பாகம்) ஒழுங்காக இருக்காது. மேடு பள்ளமாகவும் வளைந்தும் விரிந்தும் இருக்கும். சம்மட்டி அடியினால் — இனி என் முனையை ஒழுங்காக வெட்டிக் கூராக்குவார்கள். நான் உறுதியாகவும் நீண்ட நாட்கள் உழைப்பதற்கு ஏற்றவனாகவும் ஆக வேண்டாமா? இதற்காக என்னை நெருப்பைப் போலப் பழுக்கக் காய்ச்சுவார்கள். குபீரென்று குளிர்ந்த நீரில் முக்கிக் குளிர வைத்துவிடுவார்கள். இப்போது நான் ரொம்ப உறுதியுள்ளவனாகிவிடுவேன். ஆனால் இந்த நிலையில் நான் பட்டென்று உடைந்து விடுவேனே! இது நேரக் கூடாது. உறுதியானவனாகவும் அதேசமயம் வளையக் கூடியவனாகவும் இருக்க வேண்டாமா? ஆகவே என்னை மறுபடியும் காய்ச்சுவார்கள். இந்தத் தடவை முன்பு போல் தணல் துண்டமாகக் காய்ச்சாமல் சுமாராகக் காய்ச்சுவார்கள். குளிர வைப்பதும் முன்புபோல் குபீரென்று நீரில் முக்கியல்ல. மெதுவாக தானாகக் குளிரும்படி விட்டு விடுவார்கள். இப்போது நான் உடைக்க முடியாதவனாகவும் உறுதியுள்ளவனாகவும் ஆகிவிடுவேன். இனி என்னைச் சாணையில் கொடுத்துப் பளபளப்பாக்குவார்கள். என்னோடு என் சகோதரர்களான சின்னக் கத்தி, கார்க் எடுக்கும் ஸ்குரு, ஆணியை முடுக்கும் ஸ்குரு டிரைவர், சின்ன அரம், குத்தூசி ஆகியவர்களை — இவர்களுடைய தோற்றமும் என்னுடையதைப் போலத்தான் — கொண்டு வந்து இணைப்பார்கள். இதோ கடையில் இருந்த நான் உன் பிறந்த நாள் பரிசாக உன் கைக்கு வந்துவிட்டேன்'' என்று தன் கதையைக் கூறிற்று பேனாக் கத்தி.

ஆவலோடு அதை எடுக்கப் போனான் ரமணி. ''நில்! நில்!'' என்றது கத்தி. ''என்னை ஜாக்கிரதையாகக் காப்பாற்ற வேண்டும். ஒழுங்காக உபயோகிக்க வேண்டும். நீர்க் கசிவோடு என்னை வைத்திருந்தால் என் உடல் கெட்டுவிடும். என்னைக் கொண்டு என் சகோதரனையே (இரும்பை) வெட்டாதே. அதற்குத் தனியாக வேறு ஆயுதங்கள் இருக்கின்றன. என்னைக் கொண்டு பூமியைத் தோண்டாதே. கல்லிலே என் உடல் பட்டு முனை மழுங்கிப் போவேன். பள்ளிக்கூடத்திலே பெஞ்சு, டெஸ்க், இவை மீது என்னைக் கொண்டு உன் பெயரைக் குடையாதே. பொருள்களை அழிக்க என்னைத் தொழிலாளி உருவாக்கவில்லை. ஆக்க வேலைக்குப் பயன்படுத்தவே உருவாக்கியிருக்கிறான். என்ன தெரிந்ததா? என்னை அன்போடு அறிவோடு நடத்தினால் நானும் உனக்கு அடிமையாக உழைப்பேன்'' என்றது. மாமாவின் பரிசை இப்போது ரமணி மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொண்டான்.

—கிருஷ்ணவேணி





1



2

'பூ . . . இவ்வளவுதானு ?'

உங்களுக்கெல்லாம் பூக்களைக் கண்டால் ரொம் பிடிக்குமாமே, அப்படியா? மலர்களைக் கண்டா யாருக்குமே மகிழ்ச்சிதான். தூய்மையை உருவ படுத்துவதற்கு மலர்களைத்தானே உவமையா கூறுகிறார்கள்? ஆண்டவனுக்கு உகந்தவை மலர்க ஆனந்தத்தின் அடையாளம் பூக்கள். மலர்களி தான் எத்தனை எத்தனை வகைகள், வண்ணங்க அப்பப்பா! அது சரி. இங்கே காணும் மலர்க நீங்கள் பார்த்திருக்கிறீர்களா? எங்கே உங்கள் ஞா சக்திக்கு ஒரு சோதனை. இங்குள்ள மலர்களி பெயர்களைக் கூறுங்கள் பார்க்கலாம். தோல்விை ஒப்புக்கொண்டவர்கள் மட்டும் இந்தப் பக்கத்தை தலைகீழாகத் திருப்பி விடையைப் பார்த்து கொள்ளலாம்.

இடது பக்கம் : 1. வெண்டைப்பூ. 2. அல்லி மலர். மயில் கொன்றை. 4. கஸ்தூரி அரளி.
வலப் பக்கம் : 5. செம்பருத்தி. 6. சூரியகாந்தி. சாமந்தி. 8. சம்பங்கி.



3



4

5



6





7



8

தலைகீழ் பாடம்

ஒரு நாள் இண்டின்கி என்ற ஆவிக் கடவுள் (இவருக்கு வானவில் என்ற பெயரும் உண்டு) பறவைகளுக்குக் கூடு கட்டுவது எப்படி என்பதை விவரித்துக் கொண்டிருந்தார். அப்பொழுது அங்கிருந்த வௌவால் முந்திரிக் கொட்டை போல் முந்திக் கொண்டு கூடு கட்டுவதைப் பற்றித் தனக்கு முதலில் சொல்லிக் கொடுக்கும்படி கேட்டது.

''நீ வௌவால். நீ பறவையல்ல'' என்று கூறினார் ஆவிக் கடவுள்.

''ஆனால் எனக்கு இறக்கைகள் இருக்கின்றனவே? பறக்க முடியுமே? நானும் ஏன் கூடு கட்டக் கூடாது?'' என்று பிடிவாதம் பிடித்தது வௌவால். அது மட்டுமல்ல, ஆவிக் கடவுளைப் பேச விடாமல் தொந்தரவும் செய்தது. இதனால் கோபமுற்ற ஆவிக் கடவுள் வௌவாலைப் பிடித்துக் கட்டித் தலைகீழாகத் தொங்க விட்டுவிட்டார். எல்லாப் பறவைகளும் இதைப் பார்த்து நகைத்தன.

தம் பாடங்களை முடித்துக் கொண்டு இண்டின்கி கடவுள், ''உனக்குத் தண்டனை போதுமா? இப்பொழுது சரியான பாடம் கற்றுக் கொண்டாயா?'' என்று கேட்டார்.

''இல்லையே! நான் இப்படித் தலைகீழாக இருக்கவே விரும்புகிறேன். உலகத்தை இப்படிப் பார்ப்பது ஆனந்தமாகவே இருக்கிறது!'' என்றது வௌவால்.

இதைக் கேட்ட இண்டின்கி கடவுள், ''அப்படியா? நீ இப்படியே உன் ஆயுள் முழுதும் தொங்கிக் கொண்டே இரு!'' என்று கூறிவிட்டார்.

தலைகீழாகத் தொங்குவதில் தனக்கு மகிழ்ச்சிதான் என்று வௌவால் பொய்யாகத்தான் சொல்லிற்று. இண்டின்கி இப்படித் தனக்குச் சாபம் கொடுப்பார் என்று அது எதிர்பார்க்கவில்லை. இதனால் மிக்க வேதனை அடைந்தது வௌவால்.

மற்றப் பறவைகள் தனக்கு ஏற்பட்ட சாபத்தைத் தெரிந்து கொண்டு விடக்கூடாது என்பதற்காக அது பகலில் வெளியே வருவதே கிடையாது. எங்கேயாவது மரப் பொந்திலோ, குகைக்குள்ளோ இருளில் பகல் முழுதும் வௌவால் பதுங்கித் தூங்கிக் கொண்டிருக்கும்—தலைகீழாகத்தான். இரவில்தான் இரை தேடி வெளி வரும். வௌவால்கள் இரவில் மட்டும் பவனி வருவதற்கான காரணம் இப்போது புரிகிறதா உங்களுக்கு?

— பி. எஸ். மணி

விஜயா


சிரிக்கச் சிரிக்க..!
"நான் இன்னிக்கு விளக்கெண்ணெய் குடிச்சிருக்கேன். என்னைப் பார்த்தா அப்படித் தெரிகிறதா?"
"இல்லையே, எப்போதும் போலத்தான் இருக்கிறாய்!"
சாமா
"பையன் உட்கார்ந்து படிப்பதற்கு நல்ல நாற்காலி வேணும்னு ஒத்தைக் காலில் நிற்கிறான்!"
"பையன் மட்டுமா? அந்த நாற்காலியும்தான்!"
"எங்க பாட்டி எப்பவும் சமுத்திரத்தில் மூழ்கியபடியேதான் இருக்காள்!"
"அது எப்படிடா முடியும்?"
"பேரன் பிறந்தான், ஆனந்தக் கடலில் மூழ்கினாள். தேரில் சுவாமி வந்தது, பக்திக் கடலில் மூழ்கினாள். இதெல்லாம் போக எப்பவும் சம்சாரக் கடலில் மூழ்கியபடியே இருப்பாள்!"
"டேய்! தீபாவளிக்கு உங்க அத்திம்பேர் வந்தாரே கையில் ஏதேனும் வெடிவாணங்கள் கொண்டு வந்தாரா?"
"இல்லையே! காலில்தான் பித்த வெடியோடு வந்தார்!"
டாக்டர்: ஒரு வேளை பட்டினி போட்டு ஒரு மைல் நடக்கணும்.
குண்டுப்பயல்: யாரை?



சிட்டுக்குருவி சொன்ன சின்னக் கதை


அந்த ஊரில் பெரிய ஆலமரம் ஒன்று இருந்தது. அதில் சிட்டுக் குருவி ஒன்று கூடு கட்டியிருந்தது.

ஒரு நாள் சிட்டுக் குருவி தன் குஞ்சுக்கு இரை கொண்டு வந்து கொடுத்துத் தின்னச் சொன்னது. அதற்கு அந்தக் குஞ்சு, ''அம்மா, அம்மா! நான் ஒரு கதை சொல்கிறேன். நீ அதைக் கேட்டால்தான் இரையைத் தின்பேன்'' என்றது. தன் செல்லக் குழந்தையின் அன்பு வேண்டுகோளைத் தாய்க் குருவி ஏற்றவாறு, ''சரி, சொல்'' என்றது.

குருவிக் குஞ்சு கதை சொல்லத் தொடங்கியது.

''ஒரு குளத்தில் ஒரு மீன் இருந்தது. அது ஒரு துன்பமும் இல்லாமல் தண்ணீரில் அங்கும் இங்குமாக மகிழ்ச்சியோடு நீந்திக் கொண்டிருந்தது.

''ஒரு நாள் குளத்தின் கரையில் ஒரு கொக்கு வந்து அந்த மீனைத் தின்பதற்காகக் காத்திருந்தது. அந்த மீன் வெளியில் தலையை நீட்டியபொழுது, காத்திருந்த கொக்கு அதை 'லபக்'கென்று கொத்திப் பிடித்துக் கொண்டது.



''அகப்பட்டுக் கொண்ட மீன் கொக்கைப் பார்த்து, 'ஏ, கொக்கண்ணா! நான் சாவதற்கு அஞ்சவில்லை. ஆனால் எனக்கு வெகு நாட்களாக ஒரே ஒரு ஆசை. அது மட்டும் நிறைவேறினால் நான் ஆனந்தமாக உயிர் விடுவேன்' என்றது உருக்கமாக.

''கொக்கு மீனைக் குளத்தின் படிமீது விட்டு விட்டு 'அது என்ன ஆசை?' என்று கேட்டது.

'''நான் ஒரு கதை சொல்கிறேன், கேட்கிறாயா?' என்றது மீன்.

'''அப்படியா? கதை யென்றால் எனக்கு ரொம்பப் பிடிக்கும். நல்ல கதையாகச் சொல்!' என்றது கொக்கு.


''மீன் கதை சொல்ல ஆரம்பித்தது.

''ஒரு காட்டில் ஒரு நரி வசித்து வந்தது. ஒரு சமயம் அது திராட்சைத் தோட்டத்தின் வழியே சென்று கொண்டிருந்தது. பழுத்துத் தொங்கிக் கொண்டிருந்த திராட்சைப் பழங்களைப் பார்த்த நரி, அவைகளைத் தின்ன வேண்டுமென்று ஆசைப்பட்டது. பழம் கொடியில் சற்று உயரமாக இருந்ததால், பழத்தைத் தின்பதற்கு இந்த மாதிரி துள்ளிக் குதித்தது' என்று மீன் ஒரு முறை துள்ளிக் குதித்துக் காட்டியது. 'நரிக்கு எட்டவில்லை. மீண்டும் ஒரு முறை இம்மாதிரி குதித்தது' என்று மறுபடியும் மீன் சிறிது பலமாகத் துள்ளிக் குதித்தது. 'அப்பொழுதும் பழம் எட்டவில்லை. பிறகு ஒரே மூச்சாக இப்படி எகிறிக் குதித்தது' என்று சொல்லி, அந்தக் கெட்டிக்கார மீன் தண்ணீருக்குள் தாவிக் குதித்து மறைந்து விட்டது. கொக்கு ஏமாற்றத்தோடு முகத்தைத் தொங்கப் போட்டவாறு மறுபடியும் தவம் செய்யத் தொடங்கியது, வேறு ஏதாவது அசட்டு மீன் சிக்காதா என்று.''


குருவிக் குஞ்சு கதையை முடித்தது.

தாய்க் குருவிக்கு ஆனந்தம் தாங்க முடியவில்லை. தன் குஞ்சின் அறிவுத் திறனைக் கண்டு பூரித்துப் போயிற்று.

—சிற்பி சோமு



பலே பாலு!
கற்பனை: வாண்டு
சித்திரம்: செல்லம்
நம்ம நாயைப் பாத்தியா? ராஜ பாளையமாக்கும்! உலகத்திலேயே அதிக வேகமாக ஓடக்கூடியது இந்த ஜாதி தான்.
ப்பூ! என் டிக்கி இதை விட வேகமாக ஓடுமாக்கும், புரிஞ்சுக்க தம்பி!
இதுவா? இந்தக் குள்ளனா...? ஹு... ஹு... ஹா! வர வெள்ளிக் கிழமை போலீஸ் மைதானத்திலே உன் நாய்க்கும் என் நாய்க்கும் போட்டி. என்ன சொல்றே?
சொல்றதென்ன? பாத்துடலாம்.
வா... வா... டிக்கி. நீ குட்டை தான். அவன் நாயைப் போலப் பாய்ஞ்சு ஓட முடியாது. பரவாயில்லே, நான் உனக்குப் பயிற்சி கொடுக்கறேன், கவலைப் படாதே.
ஓடி வா... ஓடி வா... டிக்கி! இந்தப் பயிற்சி உன்னை நல்ல ஓட்டக்காரனாக்க உதவும்.
தொடர்ந்து ஓடி வா டிக்கி. நான் 'ஸ்பீடு' எடுத்துட்டேன். இந்தப் பயிற்சி உன்னை வேட்டை நாயை விட வேகமாக ஓட வைக்க உதவும்.
இதோ நம்ம வீட்டுக்கு வந்தாச்சு டிக்கி! அடப் பாவி, எத்தனை நாழியா இப்படிக் காரியரிலே உக்காந்துக்கிட்டு வரே நீ....?
உனக்கு ரொம்பப் பசிக்கிறதில்லியா? உனக்குப் பிடிச்ச இந்த எலும்பு வேணுமின்னா... எங்கே, ஓடி வா பார்க்கலாம். 'கம் ஆன்' டிக்கி...!
வரல்லியா டிக்கி? எதுக்குப் பள்ளம் தோண்டறே?



அடப் பாழும் நாயே! ஓடித் தூரத்தி இந்த எலும்பைப் பிடிக்கிறதை விட, இருந்த இடத்திலிருந்து தோண்டி எடுத்துக்கிறதையே சுகமா நினைக்கிறியா? நீ ஒழி நாசமாய்ப் போகிற பேர!
வெள்ளிக்கிழமை - பந்தய மைதானத்தில்
சீனுப் பயல் வைச்சிருக்கிற எலும்பை எந்த நாய் முதலிலே போய்க் கௌவுகிறதோ அதுதான் "வின்னர்". என் நாய் "ரன்னர்" ஆனால் உன் நாய் "தின்னர்" தான்! ஹா... ஹா... ஹா!
ரெடி... ஸ்டெடி... ஒண்... ரூ... உன்னுடைய பொடியன் டிக்கியைப் பாரு...
ஹா... ஹா... என் டிக்கி குண்டுதான். சோம்பேறி தான். ஆனால் மண்டு இல்லே. ரொம்பப் புத்திசாலி புரிஞ்சுக்க...
ஏய்... யேய்...
இது நியாயமில்லே. மோசடி... பொய்... அநீதி.
ஹா... ஹா... ஹா...!
பாலுவின் நாய் டிக்கியே வெற்றி வீரன் என்பதை நடுவனாகிய நான் தீர்ப்பளிக்கிறேன்.
உன் கண்டிஷன் என்ன? எந்த நாய் முதல்லே போய் எலும்பைக் கௌவுகிறதோ அதுதான் வெற்றி பெற்றதாகும்" அப்படின்னு தானே சொன்னே? எப்படிப் போய்க் கௌவினா என்ன? என் டிக்கிதான் வின்னர்!

தெரியுமா?

326. பெண்டகனுக்கு எத்தனை பக்கங்கள் ?

327. அண்டார்க்டிகாவிலுள்ள மிக உயரமான மலையின் பெயர் என்ன?

328. மெஸபொடேமியாவின் இப்போதைய பெயர் என்ன ?

329. பவழங்கள் மலிந்த காப்ரி தீவு எங்குள்ளது ?

330. உலகின் மிக உயர்ந்த ரகப் பருத்தி எந்த நாட்டில் விளைகிறது ?

331. அமெரிக்காவில் உள்ள மாகாணங்களில் பரப்பளவில் பெரியது எது ?

332. போலந்தின் முக்கிய நதி எது ?

333. அஸ்வான் அணை எந்த நதியின் மீது கட்டப்பட்டுள்ளது?

334. போபோகாடபெட் என்ற மலை எங்குள்ளது?

335. பெட்ரோலஜி என்றால் என்ன? (Petrology)

336. சந்திரனின் சுற்றளவு உத்தேசமாக (a) 3421 மைல்கள் (b) 6788 மைல்கள் (c) 10,034 மைல்கள் — இவற்றில் எது சரி?

337. 'ஃபிளோரா', 'ஃபானா' என்றால் என்ன ?

338. 'ரக்பி' என்ற விளையாட்டில் ஒரு பக்கத்துக்கு எத்தனை ஆட்டக்காரர்கள் இருப்பார்கள்?

339. பிரிட்டனில் உள்ள மிகப் பெரிய உதை பந்தாட்ட ஸ்டேடியத்தின் பெயர் என்ன?

340. ஐஸ்லாந்தின் ஜனத்தொகை — (a) 2,00,000; (b) 12,00,000 (c) 12 மிலியன். இவற்றில் எது சரி?

341. புராதன போடனீஷியன் இனத்தவர் வாழ்ந்ததாகக் கருதப்படும் இன்றைய இடம் எது?

342. கடற் பறவைகளில் மிக நீண்ட இறக்கைகளையுடைய பறவை எது?

343. காகஸஸ் மலைத்தொடர் எந்த இரண்டு கடல்களுக்கு இடையே உள்ளது?


344. கேப் டவுனுக்குப் பின்னணியாக ஒரு பெரிய மலை உள்ளது. அதன் பெயர் என்ன?

தெரியுமே!

விடைகள்: 326. ஐந்து. 327. மார்க்ஹாம் 15,100 அடிகள். 328. ஈராக். 329. மத்தியதரைக் கடலிலுள்ள நேபிள் விரிகுடாவில். 330. எகிப்தில். 331. அலாஸ்கா. 332. விஸ்டுலா. 333. நைல் நதியில். 334. மெக்ஸிகோவில். 335. பாறைகளை ஆராய்வது. 336. 6788 மைல்கள். 337. தாவர வாழ்க்கை, பிராணிகள் வாழ்க்கை. 338. பதின்மூன்று பேர்கள். 339. ஹாம்ப்டன் பார்க். 340. 2,00,000. 341. லெபனன். 342. [illegible] 343. கருங்கடல் காஸ்பியன் கடல்களிடையே. 344. 'டேபிள்' மலை.

'கோகுலம்'த்தில் வெளியாகும் கதைகளில் காணப்படும் பெயர்கள் சம்பவங்கள் யாவும் கற்பனையே ● சென்னை, சேத்துப்பட்டு 'கல்கி' அச்சகத்தில், பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்துக்காக, ஆர். அனந்தநாராயணனால் வெளியிடப்பட்டது ● ஆசிரியர்: சதாசிவம்

வாழ்வே மென்மையின் உருவகம்



'க்ளிக்' அடித்துவைப்பீர்... நிரந்தரம்

எப்போதுமே உங்கள் கையோடிருக்கட்டும் தப்பாத் துணையான க்ளிக் III. மறைந்தோடும் வாழ்வின் மணியான கணங்களை நிரந்தரமாக்கிக் காப்பீர்—நினைவுமுகம் கண்முன் நிறபதற்கே.

'இலக்கு வைத்ததும் சடக்' என எடுக்கவே ஆக்பா க்ளிக். காரியத் தகுதி வாய்ந்தது. உண்மை தவறாதது. கையாள எளிது. சிக்கனமிக்கது.

- 120 பிலிம் ரோல் ஒவ்வொன்றுக்கும் பெரிது பெரிதாக (6 x 6 செமீ.) படங்களைப் பெறுவீர்கள்.
- சிறப்பானதோர் தயார்த் தோலுறை, போர்ட்ரெய்ட் லென்ஸ், ஃப்ளாஷ்கன் ஆகியவை மேற்கொண்டு தனிவிலைக்குக் கிடைக்கும்.


தெள்ளத் தெளிவான பிரிண்டுகளுக்கும், என்லார்ஜ்மெண்டுகளுக்கும் கண்டிப்புடன் கோருவீர் ஆக்பா-கேவார்ட் போட்டோத் தாள்களை.

அனுமதிபெற்ற எல்லா ஆக்பா-கேவார்ட் விற்பனையாளர்களிடமும் கிடைக்கும்.

ஆக்பா-கேவார்ட் AG லீவர்குஸன் அவர்களின் கூட்டுறவோடு இவற்றைத் தயாரிப்போர்: தி நியூ இந்தியா இண்டஸ்ட்ரீஸ் லிட்.

விலை
ரூ. 56.25
(எக்ஸைஸ் தீர்வை உள்ளிட்டது. இதர வரிகள் தனி).

SIMOES-AG-11-TAM



ஏகபோக விநியோகஸ்தர்கள்:
ஆக்பா-கேவார்ட் இந்தியா லிமிடெட்
பம்பாய் • நியூ டெல்லி • கல்கத்தா • சென்னை.

புகைப்பட சாதனங்களின் தயாரிப்பாளர்களான ஆக்பா-கேவார்ட், ஆண்ட்வெர்ப்/லீவர்குஸன் ஆகியோரின் ரிஜிஸ்டர்டு டிரேடு மார்க்.

ஆக்பா க்ளிக—இந்தியாவின் உன்னதப் புகழ்பெற்ற காமிரா.

துரிதமாக.
ஜாக்கிரதையாக
நிச்சயமாக.

எப்படி?

இப்போது இடையில் நிற்காதபடி ஒரு நகரத்திலிருந்து மற்றொரு நகரத்திற்கு நேராக எங்கள் லாரிகளைச் செலுத்துகிறோம். இந்த துரித சர்வீஸை எங்கள் வாடிக்கையாளர்கள் பெரிதும் வரவேற்கின்றனர்.

ஏனெனில் இந்த முறையில் பார்சல்களை மேலும் துரிதமாக, ஜாக்கிரதையாகக் கொண்டு சேர்க்க முடிகிறது. இது போன்ற துரித சர்வீஸ்களை நாங்கள் மேலும் விரிவுபடுத்தி, பல நகரங்களை நேரிடையாக இணைத்து வருகிறோம்.


இந்த சர்வீஸை வியாபாரிகள் சமூகம் மிக மிக வரவேற்கிறது. ஏனெனில் வியாபாரத்திற்கான சாமான்களை ஜாக்கிரதையாக தடங்கலின்றி அடைவதால் அவர்கள் தேவையான அளவே ஸ்டாக் செய்கின்றனர். இதனால் அவர்கள் மூலதனத்தை அனாவசியமாக முடக்கத் தேவையில்லை.

இந்தச் சிறப்பான பணி ஸதர்ன் ரோட்வேஸினால் எப்படி முடிகிறதென்றால்:

- தனியார் துறையில் ஸதர்ன் ரோட்வேஸ் நிறுவனமே மிகவும் பெரிய ஸ்தாபனம்.
- அவர்கள் தங்களுக்குச் சொந்தமான லாரிகளையே இயக்குகிறார்கள்.
- அவர்களின் பயிற்சி பெற்ற ஊழியர்கள், லாரி ஸ்தாபனத்தின் ஒவ்வொரு இயக்கத்தையும் தனித்தனியே கண்காணிக்கின்றனர்.
- அவர்களின் டிரைவர்கள், உடலியலையும் உளவியலையும் பொருத்து நடத்தும் பரிசோதனைகள், மற்றும் தூரத்தைப் பற்றி மதிப்பிடும் பரிசோதனைகள், கண் கால்களிடை கச்சித ஒத்துழைப்புக்கான பரிசோதனைகள் ஆகியவற்றிற்கு உள்ளாகிய பிறகுதான் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.
- 100 மைல்கட்கு ஒன்றுவீதம் ரிப்பேர் மற்றும் பராமரிப்புக்கான வசதிகொண்ட தொழில் பட்டறைகள் அமைத்திருக்கிறார்கள்.

தென் இந்தியா முழுமையிலும் சரக்குகளை புக் செய்யும் ஆபீஸ்கள் பரவி உள்ளதால் மக்களிடை ஸதர்ன் ரோட்வேஸ் பெருநம்பிக்கை பெற்றிருக்கிறது.

ஓரிடத்திலிருந்து
மற்றொரு இடத்திற்கு
நேரிடை
பார்சல் சர்வீஸ்



உங்கள் நம்பிக்கைக்கு உரியது டிவிஎஸ் TVS

ஸதர்ன் ரோட்வேஸ் பிரைவேட் லிமிடெட்
(இது ஒரு டிவிஎஸ் ஸ்தாபனம்)
மதுரை

FDSSR-1712TMB